வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 04.02.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 35 பக்கங்கள் : 12

## வடக்கு-கிழக்கு விவசாயிகளுக்கு அரசு உரிய தீர்வு வழங்கவில்லை!

### செல்வம் எம்.பி சுட்டிக்காட்டு



மன்னார், பெப். 04

**அரசாங்கம் வடக்கு - கிழக்கில் உள்ள விவசாயிகளின் பிரச்னைகளுக்கு இதுவரை உரிய தீர்வை பெற்றுக் கொடுக்கவில்லை. பல்வேறு பாதிப்புகளுக்கு மத்தியில் விவசாய செய்கையை முன்னெடுத்துள்ள விவசாயிகளின் நெல்லுக்கு உரிய நிர்ணய விலையை தீர்மானிக்க அரசாங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் தொடர்ந்தும் விவசாயிகள் மீது கருணை காட்டவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. விவசாயிகள் தொடர்ச்சியாக ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தத்தினால் பாரிய அழிவுகளை சந்திக்கின்றனர்.

எனினும் தமது பாதிப்புக்கு நியாயமான தீர்வை தர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் அதே நேரம் அரசாங்கம் விவசாயிகளின் நெல்லின் விலையை நிர்ணயம் செய்யும் நிலையில் அவரது சிந்தனை இருக்கவில்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

பொறுப்பான அமைச்சர்

11

## சுரேஷ் சாலே, கோட்டாவை கைது செய்ய அரசு திட்டம்!

### உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 04

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மையமாக கொண்டு முன்னாள் புலனாய்வுத்துறை பணிப்பாளர் சுரேஷ் சாலே மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரை கைது செய்யும் திட்டம் தீட்டப்படுவதாக, பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை

11

## அதீத போதைப் பாவனை; யாழில் இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், பெப். 04

அதீத போதைப் பாவனையால் சுகவீனமுற்ற இளைஞன் ஒருவர், வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த 29 வயது இளைஞர் ஒரு வரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இளைஞனின் உடற்கூற்று பரிசோதனையில்

11

*சுதந்திர தினமான இன்று*

## ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு 3 எம்.பிக்கள் உட்பட 7 பேருக்கு தடை

மட்டக்களப்பு, பெப். 04

மட்டக்களப்பு நீதிமன்ற நியாதிக்க எல்லைக்குள் இன்று ஆர்ப்பாட்டம் அல்லது போராட்டங்களில் ஈடுபட இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட 3 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட எழுவருக்கு எதிராக தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரால் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் இதற்கான தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின்

11

## கடைகளுக்கு வெளியே பொருள்களை காட்சிப்படுத்தினால் இனி நடவடிக்கை

### யாழ். பொலிஸார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 04

யாழ்ப்பாண நகரில், வர்த்தக நிலையங்களுக்கு வெளியில் பொருட்களை காட்சிப்படுத்திய வர்த்தகர்களுக்கு எதிராக நேற்று பொலிஸாரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பிலும் வர்த்தகர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டன.

தூய்மையான இலங்கை செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக, யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் நகரப் பகுதி வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்

11

## சுதந்திர தினத்தை முன்னிட்டு 285கைதிகள் இன்று விடுதலை!

கொழும்பு, பெப். 04

77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று 285 கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விசேட அரச பொது மன்னிப்பின் கீழ் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஆறு பெண் கைதிகள் உட்பட 285 பேர் விடுதலைச் செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை, இன்று சிறைக் கைதிகளை திறந்த வெளியில் சந்திப்பதற்கும், அவர்களின் உறவினர்களுக்கு விசேட சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## கைதான இந்திய மீனவர்களில் ஒருவருக்கு 6 மாதங்கள் சிறை!

### 40 இலட்சம் ரூபா தண்டப்பணம்

### 7 பேர் நிபந்தனையுடனும் 2 பேர் முழுமையாகவும் விடுதலை

யாழ்ப்பாணம், பெப். 04

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைதான 10 மீனவர்களில் ஒருவருக்கு 6 மாத கடூழியச் சிறைத் தண்டனையையும் 40 இலட்சம் ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது ஊர்காவற்றுறை நீதிமன்றம்.

ஏனைய 9 பேரில் இருவர் முழுமையாக விடுவிக்கப்பட்டதுடன் 7 பேர் நிபந்தனையுடன்

11

## சுதந்திர தின கொண்டாட்டம் இன்று!

கொழும்பு, பெப். 04

தேசிய மறுமலர்ச்சிக்காக அனைவரும் அணிதிரள்வோம் என்ற தொனிப்பொருளின் கீழ் 77ஆவது சுதந்திர தின கொண்டாட்டம் இன்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி அனுரகுமார திஸநாயக்க தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் பங்கேற்கும் இராணுவச் சிப்பாய்களின் எண்ணிக்கை 40 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா தெரிவித்தார்.

அத்துடன், இந்த ஆண்டு சுதந்திர தின அணிவகுப்பில் எந்த கவச வாகனங்களும்

11

## ட்ரம்பின் தீர்மானத்தினால் இலங்கையின் அரசுசாரா நிறுவனத்துறை நெருக்கடியில்!

நியூயோர்க், பெப். 04

யு.எஸ். எயிட் நிதியுதவியை முடக்கும் அமெரிக்க அரசாங்கத்தின் தீர்மானம், இலங்கையின் அரச சார்பற்ற நிறுவனத் துறையை நெருக்கடிக்கு தள்ளியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் இத்தீர்மானத்தினால், அரசசாரா நிறுவன துறையில் 1,000 இற்கும் மேற்பட்ட தொழில்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், ஜனநாயகம், மனித உரிமைகள் போன்ற நோக்கங்களில் கவனம் செலுத்தும் பல

11

## ஆனந்த விஜேபாலவின் எம்.பி. பதவியை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி மனு!

கொழும்பு, பெப். 04

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைச் செல்லுபடியற்றதாக்க உத்தரவிடக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனுவை பொதுஜன பெரமுன கட்சியின் நிர்வாகச் செயலாளர் ரேணுகா பெரேரா சமர்ப்பித்துள்ளார்.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, பாராளுமன்றச் செயலாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

குறித்த மனுவில்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








யாழ்ப்பாணம், மாவிட்டபுரத்தில் 'சிவபூமி திருக்குறள் வளாகம்' நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

# நெல்லுக்கு 115 ரூபா நிர்ணய விலையை அறிவிக்கத் தயாராகின்றது அரசாங்கம்!

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 04

நெல்லுக்கு உற்பத்திச் செலவு 30 சதவீதத்தையும் சேர்த்து 130 ரூபாவை நிர்ணயிப்பதாக அரசாங்கம் கூறியது. ஆனால் 115 ரூபா நிர்ணய விலையாக அறிவிக்கப்படவுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது. அவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்பட்டால் அரசாங்கத்தின் வாக்குறுதிகள் முற்றிலும் பொய்யானவை என்பது நாட்டுக்கு வெளிப் படுத்தப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

நெல்லுக்கு உற்பத்தி செலவு 30 சதவீதத்தையும் சேர்த்து 130 ரூபாவை நிர்ணயிப்பதாக அரசாங்கம் கூறியது. ஆனால் 115 ரூபா நிர்ணய விலையாக அறிவிக்கப்படவுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

உற்பத்திச் செலவுக்கு அப்பால் விவசாயிகளின் வாழ்க்கைச் செலவு பற்றி சிந்திக்க வேண்டும். நெல்லுக்கு 130 ரூபா நிர்ணய விலை அறிவிக்கப்படும் என விவசாயிகளுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு என்ன வாயிற்று?

130 ரூபா நிர்ணய விலையை அமைச்சரவை தீர்மானிக்காவிட்டால் அரசாங்கத்தின் மிகப் பெரிய பொய் மக்களுக்கு வெளிப்படுத்தப்படும். நெல் கொள்வனவுக்கு அரசாங்கத்தினால் 5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால் திறை சேரியிடமிருந்து இன்னும் பணம் பெற்றுக் கொள்ளப்பட வில்லை. இந்த பில்லியனில் 40,000 மெற்றிக் தொன் அரிசியை மாத்திரமே கொள்வனவு செய்ய முடியும்.

40,000 மெற்றிக் தொன் அரிசியை கொள்வனவு செய்து ஜனாதிபதி கூறியதைப் போன்று பாரிய களஞ்சிய சாலைகளை உருவாக்க முடியுமா? நுகர்வோரின் பிரச்னையை விவசாயிகள் பக்கம் திருப்பி விடும் நடவடிக்கையையே அரசாங்கம் முன்னெடுக்கவிருக்கிறது. அரசாங்கம் கூறிய முறைமை மாற்றம் இதுவா? - என்றார். (அ)

# மக்களின் வயிற்றிலடித்து அரசால் முன்னோக்கி பயணிக்கமுடியாது!

## ரோஹித அபேகுணவர்த்தன சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 04

நாட்டு மக்களின் வயிற்றிலடித்து அரசாங்கத்தினால் முன்னோக்கிப்பயணிக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், விவசாயிகளுக்கு அவர்களின் அரிசியை உரிய விலைக்கு விற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதன் காரணமாக விவசாயிகள் வீதிக்கு இறங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே அரசாங்கம் விவசாயிகளுக்கு உத்தரவாத விலையொன்றை வழங்க வேண்டும்.

மறுபுறம் அரசாங்கம் நுகர்வோருக்கு உரிய விலையில் அரிசியை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிங்களப் புதுவருடத்தில் 300 ருபாவை பார்க்கிலும் அரிசி விலை அதிகரிக்கும் என கூறப்படுகின்றது.

அரிசியை எப்போதும் வெளிநாட்டிலிலிருந்து கொள்வனவு செய்ய முடியுமா? அது பொருத்தமானதாக அமையுமா? இல்லை அல்லவா.

இந்த அரசாங்கம் நாட்டுக்கு பொருத்தமான விடயங்களை மேற்கொள்ளும் என்ற நம்பிக்கையிலேயே மக்கள் எம்முடைய அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்பினர். மக்களின் வயிற்றிலடித்து அரசாங்கத்தினால் முன்னோக்கிப்பயணிக்க முடியாது. - என்றார். (அ)

# வெளிநோயாளர்களின் எண்ணிக்கை அரச வைத்தியசாலைகளில் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 04

நாட்டில் உள்ள அரச வைத்தியசாலைகளிலுள்ள வெளிநோயாளர் பிரிவுகளுக்கு ஆண்டு தோறும் சுமார் 58 மில்லியன் மக்கள் வருகை தருவதாக சமூக மருத்துவ நிபுணர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

சுமார் 03 மில்லியன் மக்கள் அரச வைத்திய சாலைகளில் சிகிச்சை பெறுவதாகவும், சுமார் 07 மில்லியன் மக்கள் சிகிச்சைக்காக வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சங்கத்தின் தலைவர் சிறப்பு மருத்துவர் கபில ஜயரத்ன குறிப்பிட்டார்.

இலங்கையில் தற்போது பெண்களின் ஆயுட்காலம் சுமார் 80 ஆண்டுகளாகவும், ஆண்களின் ஆயுட்காலம் 73 ஆண்டுகளாகவும் உள்ளதாகவும், முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

# 'இந்துக்களின் போர்' 7ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.04

இலங்கையின் புகழ்பெற்ற தமிழ்ப் பாடசாலைகளான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு இந்துக் கல்லூரிகளுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் 'இந்துக்களின் போர்' என வர்ணிக்கப்படும் வருடாந்த கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 7ஆம், 8 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (எ)

# யாழ். சிறைச்சாலையில் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், பெப்.04

யாழ்ப்பாணத்தில் உள்ள மருத்துவ மனைகளின் இரத்த வங்கிகளில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக இன்று காலை 09 மணிமுதல் இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் அத்தியட்சகர் சீ. இந்திரகுமார் தலைமை யில் இந்த இரத்ததான முகாம் நடை பெறவுள்ளது. உதிரம் கொடுத்து உயிர் காக்கும் பணிக்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், குருதிக்கொடையாளர் களின் ஆதரவை எதிர்பார்த்துள்ளதாக சிறைச்சாலையின் அத்தியட்சகர் தெரிவித்தார். இலங்கையின் சுதந்திரதினத்தை முன்னிட்டு இன்று இதுபோன்று பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (எ-05)

# மின்சாரசபையை விற்கமாட்டோம்!

## அமைச்சர் குமார ஜயக்கொடி

கொழும்பு, பெப். 04

இலங்கை மின்சாரசபை ஒருபோதும் தனியாருக்கு விற்பனை செய்யப்படமாட்டாது. வலுசக்தி துறையில் அரசின் இறையாண்மை மற்றும் உரிமை பாதுகாக்கப்படும் அதே வேளை, பணியாளர்களின் தொழில் பாதுகாப்பை அரசாங்கம் உறுதிப்படுத்தும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்தார்.

நுரைச்சோலை லக்விஜய மின்உற்பத்தி நிலையத்துக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னரே நாம் இந்நிறுவனத்தை விற்பதற்கு எதிர்ப்பினை வெளியிட்டிருக்கின்றோம். எமது அந்த இலக்கு மற்றும் வேலைத்திட்டம் இன்றும் அவ்வாறே உள்ளது. வலுசக்தி மற்றும் நிதித்துறைகளில் அரசின் இறையான்மை, உரிமை பாதுகாக்கப்படவேண்டும் என்று நாம் தேர்தலுக்கு முன்பிருந்தே வலியுறுத்தி வருகின்றோம். அதற்கமையவே நாம் தற்போதும் செயற்பட்டு வருகின்றோம்.

எந்த வகையிலும் நாம் இந் நிறுவனத்தை விற்க மாட்டோம். மின் உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம் என்பன தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளதை மாத்திரமே மறுசீரமைப்பாக மேற்கொண்டிருக்கின்றோம். அவை நூறு வீதம் அரச நிறுவனங்களாகும். இவற்றில் எதுவுமே தனியாருக்கு உரித்துடையவை அல்ல. எனவே இந்த நிறுவனங்களின் எதிர்காலம், தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு என்பவற்றை நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

நாட்டின் தினசரி மின்சாரத் தேவையில் 40 சதவீதத்தை வழங்கும் லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தின் பங்களிப்பைக் கருத்தில் கொண்டு, நாட்டின் மின்சார அமைப்பின் தொடர்ச்சியான மற்றும் நிலையான பராமரிப்புக்கு, அது மிக உயர்ந்த நிலையில் பராமரிக்கப்பட்டு சிறந்த முறைகளைப் பயன்படுத்தி இயக்கப்பட வேண்டும். மேற்படி செயற்பாடுகள் தற்போது இடம் பெற்று வருகின்றமை தொடர்பில் திருப்தியடைகின்றோம்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
04.02.2025 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், தை 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சுதந்திரத்தின் எல்லை

அனைத்து மக்களும் இலங்கையர்களாக சிந்திக்க வேண்டும் - அவ்வாறானதொரு நிலைமையை நாங்கள் உருவாக்குவோம் என்று கூறும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டு மக்களின் சுதந்திரத்தை எவ்வாறு உறுதி செய்யப் போகின்றது. ஒவ்வோர் ஆண்டும் சுதந்திர தினம் என்னும் போது, ஒரு பகுதி மக்கள் கொண்டாட்ட மனதோடு இருக்கின்றனர் ஆனால், இன்னொரு பகுதி மக்களோ எதிர்புணர்வுடன் இருக்கின்றனர். இலங்கையின் சுதந்திர தினத்தை, ஈழத் தமிழ் மக்கள் மனமுவந்து மகிழ்ந்த வரலாறு இதுவரையில் இல்லை. திணைக்களங்களில் பணிபுரியும் பலரும் மனதுக்குள் விரும்பாத ஒன்றை சீவியத்துக்கான தொழிலுக்காக ஏற்றுக்கொண்டவர்களாகவே தேசிய கீதத்தை உச்சரிக்கின்றனர். இந்த நிலைமைய அனுரகுமார திஸநாயக்க அரசாங்கத்தினால் மாற்றியமைமைக்க முடியுமா?

சுதந்திரம் என்றவுடன் பாலாறும் தேனாறும் ஓட வேண்டும் என்று நினைப்பதுண்டு - சுதந்திரம் பற்றிய பாடல்கள் எல்லாம் அப்படித்தான் இருக்கின்றது. ஆனால் இன்றைய உலக ஒழுங்கில் சுதந்திரம் என்பது பாடப்புத்தகத்தில் இருப்பது போன்ற ஒன்றாக இல்லை. இருக்கவும் முடியாது. ஒரு காலத்தில் நமது இளைஞர்கள் புரட்சியை கனவு கண்டது போன்ற ஒன்றுதான் சுதந்திரம் பற்றிய கனவுகளும். கனவுகள் ஒரு போதும் நிஜத்துடன் உறவாடுவதில்லை.

இன்றைய சுதந்திரம் என்பது அதிகார சக்திகளின் தலையீடுகளுக்கு உள்ளாகியிருக்கும் ஒன்று. எதை - யார் நுகர வேண்டும் என்பதை அதிகார சக்திகளும், அந்த அதிகார சக்திகளின் பாகாசுர ஊடக நிறுவனங்களுமே தீர்மானிக்கின்றன. இந்த அரசியல் ஒழுங்கில் இலங்கை ஒரு சுயாதீன நாடு என்பதே ஒரு கற்பனைதான். இலங்கையே சுயாதீனமாக இருக்க முடியாத போது, இலங்கையில் வாழும் மக்களின் சுதந்திரத்தை மட்டும் சிட்டுக்குருவிக்கான சுதந்திரமாகச் சிந்திக்க முடியுமா?

அவ்வாறாயின் ஈழத் தமிழருக்கான சுதந்திரம் என்பது என்ன? ஆகக் குறைந்தளவிலாவது, வடக்கு கிழக்கை தங்களின் வரலாற்று வாழ்விடமாகக் கொண்டிருக்கும் ஈழத் தமிழினம், தங்களுடைய காரியங்களை கடுமையான தலையீடுகள் இன்றி மேற்கொள்ளுவதற்கான அரசியல் ஏற்பாடுகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஏற்கனவே அரசியலமைப்பில் இருக்கின்ற விடயங்களை முழுமையாக உறுதிப்படுத்தி, ஆளுநரின் தலையீடுகளை இல்லாதொழித்தாலே, தமிழ் நாட்டில் இருப்பது போன்ற மாகாண ஆட்சிமுறையொன்றை ஏற்படுத்த முடியும். தற்போதைய நிலையில் அது போதுமானது. அதற்கு மப்பால் செல்ல முடிந்தால் மகிழ்சியடையலாம் - ஆனால், தற்போதுள்ள அரசியல் சூழலில் அது சாத்தியமான விடயமல்ல. அதற்கான அழுத் தங்கள் வெளியிலிருந்து இனிவரப் போவதில்லை. சிங்கள மக்கள் மத்தியில் அரசியல் தீர்வு தொடர்பில் ஏற்படும் விழிப்புணர்வு மட்டும்தான் அதனை சாத்தியப்படுத்த முடியும்.

இலங்கையை கட்டியெழுப்பப் போவதாக கூறிவரும் தேசிய மக்கள் சக்தி, அந்த இலக்கில் உண்மையான பற்றுறுதியைக் கொண்டிருந்தால், முதலில் அரசியலமைப்பை அனைத்து மக்களுக்கும் சமமாக பயன்படுத்தக் கூடிய அரசியல் சூழலை உருவாக்க வேண்டும். அரசியலமைப்பில் உறுதி பூண்டுவிட்டு, அந்த அரசியலமைப்பையே அமுல்படுத்த முடியாதென்று கூறுபவர்கள் எவ்வாறு இலங்கையை கனவு காண முடியும்? முன்னைய ஆட்சியாளர்கள் அனைவருமே இந்தத் தவறைத்தான் செய்தனர். அவர்களிலிருந்து வேறுபட்டவர்களாக தங்களை காண்பித்துக் கொள்ளும் தேசிய மக்கள் சக்தி என்ன செய்யப் போகின்றது?

# தையிட்டி விகாரை விவகாரம் குறித்து வடக்கு ஆளுநர் செயலகம் விளக்கம்

யாழ்ப்பாணம், பெப். 04

தையிட்டியில் தற்போது திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணியின் உரிமையாளர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், காணியின் உரிமையாளர்களுடன் சந்திப்பு நடத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்பின்போது விகாரை தற்போது அமைந்துள்ள காணி தனியாருக்குச் சொந்தமானது என்றும் அது தொடர்பான ஆவணங்களையும் அவர்கள் இதன்போது சமர்ப்பித்திருந்தனர். திஸ்ஸ விகாரைக்குரிய காணி பிறிதொரு இடத்தில் அமைந்துள்ளது என்பதையும் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர்.

விகாரை தற்போது அமைந்துள்ள காணிக்கு மேலதிகமாகவும் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த காணி உரிமையாளர்கள் அந்தக் காணியை விடுவித்துத் தருவதுடன், விகாரைக்குச் சொந்தமான அயலிலுள்ள காணியையும் மாற்றீடாக தமக்கு வழங்க வேண்டும் எனக் கோரியிருந்தனர்.

காணி உரிமையாளர்களது கோரிக்கைக்கு அமைவாக இது தொடர்பில் விகாராதிபதியுடனும், நயினாதீவு விகாரையின் விகாராதிபதியுடனும் ஆளுநர் பேச்சு நடத்தி வருகின்றார். அத்துடன் இந்த இணக்கப்பாடு யோசனை தொடர்பில் புத்தசாசன அமைச்சின் கவனத்துக்கும் கொண்டு செல்வதற்கு ஆளுநர் நடவடிக்கை எடுத்திருக்கின்றார் என்று வடக்கு மாகாண ஆளுநர் ஊடகப் பிரிவு விளக்கமளித்துள்ளது. (எ)

# விக்டர் ஐவனுக்கான அஞ்சலிக்கூட்டம்





கிளிநொச்சி, பெப்.04

சிரேஷ்ட ஊடகவியலாளர் அமரர் விக்டர் ஐவனுக்கான அஞ்சலிக்கூட்டம் கிளிநொச்சி உருத்திரபுரம் காந்திநிலையத்தில் கடந்த முதலாம் திகதி அகில இலங்கை காந்தி சேவா சங்கத் தலைவர் பேராசிரியர் சு. மோகனதாஸ் தலைமையில் நடைபெற்றது. இதில், அஞ்சலி உரைகளை வெளிச்சம் சஞ்சிகையின் ஆசிரியர் கருணாகரன் மற்றும் காந்தியம் பத்திரிகை ஆசிரியர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி ஆகியோர் ஆற்றினர்.

விக்டர் ஐவனின் உருவப் படத்துக்கு ஈகச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது. காந்தியம் சிறப்பிதழும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (எ)


# பழைய மாணவர்கள் மாட்டுவண்டி பவனி

யாழ்ப்பாணம், பெப். 04

யாழ்ப்பாணத்தின் மரபுரிமைகளையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் முகமாக யாழ்ப்பாணத்தில் மாட்டுவண்டி பவனி நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.


யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் ஒன்றுகூடலின்போது, 2010ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களின் ஏற்பாட்டில் இந்த மாட்டுவண்டி பவனி முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள வீதிகளை சுற்றி வலம் வந்த




னர். தமிழர்களின் பாரம்பரியத்தை பேணிப்பாதுகாப்பதற்கு இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபட்ட பழைய மாணவர்களை பல்வேறு தரப்பினரும் பாராட்டினர். (எ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். ஆதாயம் தரும் நாள்.

**இடபம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புது ஏஜென்சி எடுப்பீர்கள். பிரபலங்கள் உதவுவார்கள். மதிப்புக் கூடும் நாள்.

**மிதுனம்**
உறவினர் நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள்.

**கடகம்**
இதுவரை இருந்த சோர்வு அசதி நீங்கி உற்சாகம் அடைவீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். சிலரின் தவறுகளை சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள்.

**கன்னி**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். சகோதரர்களில் அரவணைப்பு அதிகரிக்கும். தாயாரின் உடல் நிலை சீராகும்.

**துலாம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் ராஜதந்திரத்தால் லாபத்தை அதிகரிப்பீர்கள். யோகம் கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு.புதுமை படைக்கும் நாள்.

**தனுசு**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். புது வேலை அமையும்.

**மகரம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். பூர்வீக சொத்துப் பிரச்னைக்கு சுமூக தீர்வு கிடைக்கும். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும்.சாதிக்கும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். நீண்டநாள் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். வேற்றுமதத்தவர் அறிமுகமாவார். உத்தியோகத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

# கலைக்குரிசில், இளங்கலைஞர், சிறந்த நூல் விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ாணம், பெப்.04

பண்பாட்லுவல்கள் அலகினால் 2025ம் ஆண்டு நடத்தப்படவுள்ளடக்கு மாகாண பண்பாட்டுப்பருவிழாவில் வழங்கப்படஎள கலைக்குரிசில், இளங்கலஞர், சிறந்த நூல் விருதுகளுான விண்ணப்பங்கள் கோரபட்டுள்ளன.

இவ்விருதளுக்கு விண்ணப்பிப்பதற்கு ஆர்வமுடையவர்கள் தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரைத் தொடர்பு கொண்டு 2025.03.31 ஆம் திகதிக்கு முன்னர் பண்பாட்டலுவல்கள் அலகிற்குக் கிடைக்கக்கூடியவாறு விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தகவலுக்கு 021-2054105 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்ளவும். அல்லது www.np.gov.lk / www.edumin.np.gov.lk இணையத்தளங்க ளின் மூலமாகவும் பெற்றுக் கொள்ள முடியும் என வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகு பிரதிப் பணிப்பாளர் லா. நிருபராஷ் அறிவித்துள்ளார். (எ)

# மனனாரில் துப்பாக்கிச் சூடு! மேலும் ஒருவர் யாழில் கைது

ன்னார், பெப். 04

மன்னார் மன்றத்துக்கு முன்பாக இடபெற்ற துப்பாக்கிச்சூட்டும்பவத்தில் இருவர் உயிந்தனர்.

இந்தத் துாக்கிச்சூடு சம்பவத்துடன் ாடர்புடைய மேலும் ஒரு தேகநபர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பெரியவிளான் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய குறித்த சந்தேகநபர் யாழ்ப்பாணம் - பெரியவிளான் பகுதியில் வசித்து வந்துள்ளார்.

இந்த நிலையில் விசேட அதிரடிப் படையினர் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டு மன்னாருக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். (எ)

# யாழ். உடுத்துறை கடற்கரையில் 'கிளன் சிறீலங்கா' செயல்திட்டம்

யாழ்ாணம், பெப். 04

"செழுமான தேசம் அழகான வவு" என்ற தூரநோக்கை டயும் விதத்தில் "கிளீன் சிறீகா" செயல்திட்டத்தின் கீழ்ற்று முன்தினம் வடமராட்ழக்கு உடுத்துறை கடற்ர பிரதேசங்களை சுத்தசய்யும் நடவடிக்கைகள் ற்கொள்ளப்பட்டன.

உடுத்து கடற்கரை பிரதேசத்தைச்றியுள்ள பகுதிகளை மருதீகணி பொலிஸார், உடுத்து 10ஆம் வட்டாரம் கடற்றொலாளர் சங்கத்துடன் இஎந்து துப்புரவு பணியை கொண்டனர்.

இதில், ;தங்கேணி பொலிஸ் ிலய பொறுப்பதிகாரி கே. ரசிங்க, உடுத்துறை கடறாழிலாளர் சங்க தலைவர் « கணேஸ்வரன், வடமராட்கிழக்கு சமாசத் தலைவர் « தங்கரூபன்,



வத்திராயன் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் என். செல்வன், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# இந்திய மீனவர்கள் 10 பேர் மன்னாரில் நேற்று கைது!

மன்னார், பெப். 04

எல்லாண்டி மீன்பிடித்ததாக இ்மஸ்வரம் மண்டபத்தைச் ந்த மீனவர்கள் 10 பேரை றே அதிகாலை இலங்கைற்படையினர் கைது நெனர்.

மேலும், அவர்களிடம் இருந்து ஒரு படகையும் கடற்படையினர் பறிமுதல் செய்தனர்.

மன்னார் கடற்பரப்பில் கைதான இந்த மீனவர்களை மன்னார் கடற்கரை முகாமுக்கு கொண்டு சென்று கடற்படையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். மீனவர்களை படகுடன் மன்னார் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்க வுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். (எ)

# செலப்பா சுவாமிகளின் குருபூசை இன்று

மப்பாணம், பெப். 04

செல்பா சுவாமிகளின் மாதாந்ருபூசைநிகழ்வு இன்று வாய்க்கிழமைகாலை9.00 மணிக்குயாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினை வாலயத்தில்நடைபெறும்.

திருமுறை நற்சிந்தனைப் பாடல்களைத்தொடர்ந்து, முற்பகல்11.00 மணிக்குதிரு முறைகளின்மகிமை பற்றி பண்டிதர்தி.மனேஷ்குமார்உரையாற்றுவார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் நிகழ்ச்சிநிரலை செயற்படுத்துகின்றது அரசு

## குற்றம்சாட்டுகிறார் சாகர காரியவசம்

கொழும்பு, பெப். 04

**மகிந்த ராஜபக்ஷ விவகாரத்தில் புலிகள் மற்றும் டயஸ் போராக்களின் நிகழ்ச்சி நிரலையே அரசாங்கம் செயல்படுத்திவருகின்றது எனவும், புலிகளின் சூழ்ச்சிக்குள் மக்கள் சிக்கக்கூடாது எனவும் பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

"மகிந்த ராஜபக்ஷவை வெளியேற்றுவதுதான் தற்போதைய அரசாங்கத்தின் வேலைத்திட்டமாக உள்ளது. மகிந்த ராஜபக்ஷ என்பவர் சிங்கம்போன்ற தலைவர்.

அவர் ஒருபோதும் திணறமாட்டார். முடிந்தால் அரசாங்க விதிவி டத்திலிருந்து வெளியேறுமாறு மகிந்த ராஜபக்ஷவுக்கு அரசாங் கம் எழுத்துமூலம் அறிவிக் கட்டும்." எனவும் அவர் சவால் விடுத்துள்ளார்.

அவ்வாறு அறிவித்தல் விடுக் கப்பட்டால் ஒருநாள்கூட அங்கு இருக்கமாட்டார்.

நிச்சயம் வெளியேறுவார் எனவும், புலிகள் மற்றும் டயஸ் போ ராக்களின் சூழ்ச்சியை செயல் படுத்தவே ஆட்சியாளர்கள் முற்படுகின்றனர் எனவும் சாகர காரியவசம் சுட்டிக்காட்டினார். (அ)

# நெல்லுக்கான நிர்ணய விலை இல்லையேல் போராட்டம் உறுதி

## விவசாய அமைப்புகள் அறிவிப்பு

கொழும்பு, பெப். 04

நெல்லுக்கான நிர்ணய விலையை அறிவிக்காத பட்சத்தில் தாம் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக விவசாய அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கத்தை நியமித்த போதிலும் இதுவரை தமக்கான உரிய தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவில்லை என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் 2024ஆம் ஆண்டு பெரும்போகத்துக்கான நெல் அறுவடை ஏலவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வடமத்திய மாகாணத்தின் சில பகுதிகளிலும் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நிலவிய மழையுடனான வானிலை காரணமாக சில பகுதிகளில் விவசாயிகள் திட்டமிட்ட நேரத்துக்கு முன்னதாகவே நெல் அறுவடையை ஆரம்பித்துள்ளதாக விவசாய அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, சீரற்ற வானிலை காரணமாக தாம் பாரியளவில் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளதாக மரக்கறிச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# நெல்லின் உத்தரவாத விலை இவ்வாரம் அறிவிக்கப்படும்!

கொழும்பு, பெப். 04

நெல்லுக்கான உத்தரவாத விலை இந்த வாரம் அறிவிக்கப்படும் என வர்த்தக, வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நெல்லுக்கான உத்தரவாத விலை விரைவில் அறிவிக்கப்படாவிட்டால், விவசாயிகள் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர் என விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

2024 - 2025 பெரும்போகத்திற்காகக் கிழக்கு மாகாணத்தில் பயிரிடப்பட்ட நெல், அறுவடைப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், வடமத்திய மாகாணத்தின் சில பகுதிகளிலும் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் சில பகுதிகளில் மழையினால் ஏற்பட்ட சேதம் காரணமாக விவசாயிகள் திட்டமிட்ட நேரத்துக்கு முன்னதாகவே நெல் அறுவடையை ஆரம்பித்துள்ளனர்.

எவ்வாறாயினும், நெல் உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களில் நெல் அறுவடை இன்னும் முறையாக ஆரம்பிக்கப்படவில்லை என வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

விவசாயிகளிடம் கலந்துரையாடி ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் நெல் உற்பத்திக்கு ஏற்படும் செலவினை அமைச்சுக்குச் சமர்ப்பித்துள்ளது.

மட்டக்களப்பு மன்னார் ஆகிய மாவட்டங்களில் அறுவடை இன்னும் நிறைவடையவில்லை.

அம்பாறை மாவட்டத்தில் 20 சதவீதமான அளவில் கூட நெல் அறுவடை மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன், நாட்டில் மூன்றில் இரண்டு பங்கு நெற்செய்கை மேற்கொள்ளப்படும் அனுராதபுரம், பொலனறுவை, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் இன்னும் முழுமையாக நெல் அறுவடை ஆரம்பிக்கப்படவில்லை.

அதற்கமைய, இந்த வாரத்தில் நெல்லுக்கான உத்தரவாத விலை நிர்ணயிக்கப்படும் என வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (அ)

# 2025 ஆம் ஆண்டில் வெளிநாட்டவர்கள் 100 குழந்தைகளை தத்தெடுக்க அனுமதி!

கொழும்பு, பெப். 04

2025 ஆம் ஆண்டில் வெளிநாட்டு தத்தெடுப்புகளை 100 ஆகக் கட்டுப்படுத்தும் வர்த்தமானி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், 2025 ஆம் ஆண்டுக்கான குழந்தைகள் தத்தெடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளிநாட்டு விண்ணப்பதாரர்களுக்கான தத்தெடுப்பு உத்தரவுகளின் எண்ணிக்கையை 100 ஆகக் கட்டுப்படுத்தும் அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

சிறுவர்களைத் தத்தெடுக்கும் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (5ஆ) (1) ஆம் உட்பிரிவின் கீழ் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் இதனை வெளியிட்டுள்ளார்.

கட்டளைச் சட்டத்தின் 1ஆவது பிரிவின்படி, இந்த தத்தெடுப்பு உத்தரவுகள் இலங்கைப் பிரஜைகளாக இல்லாத, இலங்கையில் வசிக்காத நபர்களுக்குப் பொருந்தும்.

இந்த திட்டம் இலங்கையில் உள்ள குழந்தைகளை தத்தெடுக்க விரும்பும் வெளிநாட்டு நபர்களுக்கு பொருந்துகிறது.

இலங்கையில் வெளிநாட்டினரால் குழந்தைகளை தத்தெடுப்பது குழந்தைகள் தத்தெடுப்பு கட்டளைச் சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது

குழந்தையின் நலன் மற்றும் இலங்கை சட்டங்களுடன் இணங்குவதை உறுதி செய்வதற்காக ஒரு நீண்ட கட்டமைக்கப்பட்ட சட்ட செயல்முறையை இது உள்ளடக்கியது.

இலங்கை குழந்தைகளை தத்தெடுக்க விரும்பும் வெளிநாட்டு விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை நன்னடத்தை மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கின்றனர்.

விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் 25 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும், விண்ணப்பம் செய்யப்படும் குழந்தையை விட 21 வயதுக் குக் குறையாமல் இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டிலும் அனுமதிக்கக்கூடிய அதிகபட்ச தத்தெடுப்புகளின் எண்ணிக்கை விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்படும்.

மேலும் வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அத்தகைய உச்ச வரம்பு குறித்து அறிவிக்கப்படும்.

இந்தநிலையிலேயே இந்த ஆண்டுக்கான வர்த்தமானி அறிவிப்பும் வெளியாகியுள்ளது. (அ)

# ஆயுர்வேத பொருட்களை சிறந்த தரத்தில் வழங்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்

கொழும்பு, பெப். 04

ஆயுர்வேத மருத்துவம் மற்றும் ஆயுர்வேத அழகுசாதனத் துறையில் உள்ள அனைத்து தயாரிப்புகள் மற்றும் பொருட்களையும் தரமான தரத்தில் வழங்குவதை இலக்காக கொண்டு ஒழுங்குபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ராஜகிரிய ஆயுர்வேத தேசிய மருத்துவமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஆயுர்வேத மருந்துகள் மற்றும் அழகுசாதன பொருட்கள் ஒழுங்குமுறை சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

ஆயுர்வேத துறையின் தரமான மற்றும் உயர்தர பொருட்கள் மக்களுக்கு கிடைப்பதில்லை எனவும் தற்போது அது குறித்து பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆயுர்வேத அழகுசாதனப் பொருட்கள், ஆயுர்வேத மருந்துகளின் அனைத்து தயாரிப்புகள் மற்றும் உட்பொருட்களை ஒழுங்குபடுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் அமைச்சர் புதிய உறுப்பினர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

# புதிய இயந்திரங்களை பொருத்தி ஜீவனி உற்பத்தியை விரிவாக்குக!

கொழும்பு, பெப். 04

சந்தைக்குத் தேவையான ஜீவனிகளை தொடர்ந்து விநியோகிப்பதற்கு, புதிய இயந்திரங்களை நிறுவி ஜீவனி உற்பத்தியை விரிவுபடுத்துமாறு சுகாதார மற்றும் வெகுஜன ஊடக துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இரத்மலானையில் உள்ள ஜீவனி உற்பத்தி நிறுவனத்தின் செயல்பாடுகள் தொடர்பில் கண்காணிப்பதற்காக அமைச்சர் அண்மையில் திடீர் விஜய் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

இதன் போது நிர்வாக அதிகாரிகளு டன் இடம்பெற்ற கலந்துரையா டலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தொரிவிக்கையில்-வயிற்றுப்போக்கு மற்றும் வாந்தியால் ஏற்படும் நீரிழப்பைத் தடுக்க, வாய்வழி நீரேற்ற சிகிச்சையாகப் பயன்படுத்தப்படும் வாய்வழி நீரேற்ற உப்புகள் (ஜீவனி) தயாரிப்புகளை உற்பத்தி செய்வதற்கான நவீன தொழில்நுட்ப அடிப்படையிலான இயந்திரங்களை உடனடியாக நிறுவுவது அவசியம்.

சந்தைக்குத் தேவையான ஜீவனிகளை தொடர்ந்து விநியோகிப்பதற்கு, புதிய இயந்திரங்களை நிறுவி ஜீவனி உற்பத்தியை விரிவுபடுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கிறேன்.

இந்நாட்டில் ஜீவனியை உற்பத்தி செய்யும் ஒரே நிறுவனம் அரச மருந்தகக் கூட்டுத்தாபனமாகும்.

மேற்படி கூட்டுத்தாபனத்தின் கீழ் மாதந்தோறும் 1000 மில்லிலீற்றர் கொண்ட 25 தொகுதிகளையும், 200 மில்லிலீற்றர் பைக்கெற்றுகள் கொண்ட 8 தொகுதிகளையும் உற்பத்தி செய்கிறது.

இரு வெவ் வேறு அளவான ஜீவனியை தயாரிக்க தற்போது ஒரே இயந் திரம் பயன்படுத்தப் படுகிறது.

அந்த இயந்திரமும் 12 ஆண்டுகள் பழமையானது என்பதும் தெரியவந்தது.-என்றார். (அ)

# மதுபானச்சாலைகள் பூட்டு

கொழும்பு, பெப். 04

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானச்சாலைகளும் இன்று செவ்வாய்க்கிழமை மூடப்படவுள்ளதாக மதுவரி திணைக்களம் அறிவித்துள்ளது.

இன்று மதுபான விற்பனையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மதுவரி திணைக்கள ஆணையாளர் நாயகம் உதய குமார பெரேரா தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாலைக் கோபுரம் இடிந்து வீழ்ந்ததில் வீடுகளுக்கு சேதம்!



கொழும்பு, பெப். 04

கந்தகுளிய பிரதேசத்தில் காற்றாலை மின் உற்பத்தி கோபுரத்தின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்ததில் மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளன.

இந்த விபத்து நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

தனியார் மின்சார உற்பத்தி நிறுவனத்துக்கு சொந்தமான காற்றாலைக் கோபுரத்தின் ஒரு பகுதி திடீர் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இடிந்து விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவ்விடத்தில் குறித்த நிறுவனத்துக்குச் சொந்தமான ஐந்து காற்றாலை கோபுரங்கள் இருப்பதாகவும், அவற்றில் ஒன்றின் ஒரு பகுதி இவ்வாறு இடிந்து விழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காற்றாலைக் கோபுரம் இடிந்து விழுந்ததில் ஒரு வீடு முற்றிலுமாக சேதமடைந்ததோடு, அருகில் அமைந்துள்ள இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந் துள்ளன.

இருப்பினும், கோபுரம் இடிந்து விழுந்த நேரத்தில் வீடுகளில் யாரும் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (அ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, பெப். 04

இரத்தினபுரி மாவட்டம் கொடகவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தித்தவெல்பொத்த பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கொடகவெல பொலிஸார் முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தித்தவெல்பொத்த பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு கைதானதாக பொலிஸார் தெரிவித்தனர்.


மேலதிக விசாரணைகளை கொடகவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சமஷ்டி அரசமைப்பை நிறைவேற்றவே மகிந்தவை ஓரங்கட்டுவதற்கு வியூகம்!

## அவரது பேச்சாளர் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 04

**சமஷ்டி அரசமைப்பை கொண்டுவருவதற்காகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அரசியல் ரீதியில் ஓரங்கட்டுவதற்குரிய வியூகத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயல்படுத்திவருகின்றது என்று மகிந்த ராஜபக்ஷவின் பேச்சாளரான சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.**



மகிந்த ராஜபக்ஷவின் புண்ணியத்தால்தான் ஜனாதிபதியால் யாழ்ப்பாணம் செய்து, சிரித்து பேச முடிகின்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், மஹிந்த ராஜபக்சவையே தனது அரசியல் எதிரியாகக் கருதுகின்றது. அதனால்தான் அவரை இலக்கு வைத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் பின்னணியில் மற்றுமொரு திட்டமும் உள்ளது.

மகிந்த ராஜபக்ஷவை கடுமையாக விமர்சிக்கும் யூடியூப்பர் ஒருவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ராஜபக்ஷக்களை விமர்சிப்பதற்கு அரசாங்கம் அனுசரணை வழங்குகின்றதா என்ற சந்தேகமும் எழுகின்றது.

ராஜபக்ஷக் களை இலக்கு வைத்துள்ள யூடியூப்பர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படும். ராஜபக்ச நாமத்தை நாசமாக்குவதற்குரிய ஒப்பந் தத்தை செயல்படுத்தும் யூடி யூப்கள் அடையாளம் காணப் பட்டுள்ளன.

இன்னும் சில மாதங்களில் புதிய அரசமைப்பு கொண்டு வரப்படவுள்ளது.

அது சமஷ்டி கட்டமைப்பாக இருக்கக்கூடும். ஜனாதிபதி யாழ்ப்பாணம் சென்றிருந்தார்.

தமிழர்களுடன் சிரித்து பேசுகின்றார். மஹிந்த வின் புண்ணியத்தால்தான் இப்படி நடந்தது என்பதை அநுர புரிந்துகொள்ள வேண்டும்.

சமஷ்டி அரசமைப்பை கொண்டுவருவதற்கு முன்னர் ஒரு அணியை மௌனிக்க வைக்க வேண்டும். அந்த அணிதான் மகிந்த ராஜபக்ஷ அணி.

ஒற்றையாட்சிக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்ட மகிந்த ராஜபக்ஷவுக்கான பாதுகாப்பு நீக்கப்பட்டது. தற்போது அவரை உள ரீதியில் தாக்க முற்பட்டனர்.

மகிந்த தொடர்பில் மக்கள் மத்தயில் தவறான விம்பத்தை தோற்றுவிப்பதற்கு முற்படுகின்றனர். மக்கள் நேசிக்கும் ஒரு தலைவரை நாசப்படுத்தி விட்டால், இலகுவில் சமஷ்டி அரசமைப்பை கொண்டு வரலாம் என்பதே ஆட்சியாளர்களின் நோக்கம்.-என்றார். (அ)

# பாவித்த வாகன சந்தை வீழ்ச்சியடையும்!

கொழும்பு, பெப். 04

அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் புதிய வாகனங்கள் நாட்டிற்கு வரும். அவற்றின் வருகைக்குப் பிறகு, நாட்டில் தற்போதுள்ள பயன்படுத்தப்பட்ட வாகன சந்தை 10 முதல் 15 வீதம் வரை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானேஜ் தெரிவித்தார்.

பெப்ரவரி 1 முதல் அனைத்து வகையான வாகனங்களையும் இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதித்துள்ளதாக அவர் கூறினார்.

சில வகை வாகனங்களின் விலைகள் உள்ளூர் சந்தையில் அதிகரிக்கும் என்றும், மற்றவை குறையும் என்றும் பிரசாத் மானேஜ் கூறினார்.

அதன்படி, ஜீப்புகள் மற்றும் கார்களை அவற்றின் உற்பத்தி ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகள் வரையிலும், வான்கள் மற்றும் கப் வாகனங்கள் நான்கு ஆண்டுகள் வரையிலும், பேருந்துகள் மற்றும் லொறிகளை ஐந்து ஆண்டுகள் வரையிலும் இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதித்துள்ளது.

"வாகன இறக்குமதிகளுக்கு நான்கு அடுக்கு வரி விதிக்கப்படும், இதில் வாகனத்தின் மதிப்பு, ஆடம்பர வரி, சுங்க வரி மற்றும் செலவு, காப்பீடு மற்றும் சரக்கு ஆகியவற்றின் அடிப்படையில் சிறப்பு இறக்குமதி வரி, தற்போதுள்ள 18 வீத வற் ஆகியவை அடங்கும். கூடுதலாக, சமீபத்திய வர்த்தமானி அறிவிப்பில் கார்கள் மற்றும் ஜீப்களுக்கு 50 சதவீத சுங்க கூடுதல் வரி அறிமுகப்படுத்தப்பட்டது, இதன் விளைவாக அந்த வாகனங்களுக்கான விலை உயர்வு ஏற்பட்டது," என்று அவர் கூறினார்.

புதிய இறக்குமதிகளுடன் சுசுகி வெகன் ஆர் இன் தற்போதைய விலை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிய சுசுகி வேகன் ஆர் ரூ. 7 மில்லியன் முதல் ரூ. 7.2 மில்லியன் வரை விலை நிர்ணயம் செய்யப்படும் என்றும், மற்ற வெகன் ஆர் மொடல்கள் ரூ. 6 மில்லியன் முதல் ரூ. 7 மில்லியன் வரை விலை நிர்ணயம் செய்யப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஜப்பானிய ஆல்டோ காரின் விலையும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, புதிய இறக்குமதிகள் ரூ. 3.5 மில்லியன் முதல் ரூ. 5 மில்லியன் வரை விலை நிர்ணயம் செய்யப்படும்.

இதற்கிடையில், பயன்படுத்தப்பட்ட கார் சந்தை 10 முதல் 15 சதவீதம் வரை குறையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (அ)

# சிறுவர் உரிமையை பாதுகாக்க சட்டத்தரணிகள் குழு அமைப்பு

கொழும்பு, பெப். 04

சிறுவர்கள் பல்வேறு காரணங்களால் துஷ்பிரயோகத்திற்கு உட்படுவதைக் கண்டறிந்து, அவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் சட்டத்தரணிகள் குழு ஒன்றை அமைக்க நாட்டின் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த குழு, பாதிக்கப்பட்ட சிறுவர்களின் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராவதன் மூலம், கடமைகளுக்கிடையிலான மோதல்களைத் தடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த குழுவின் உறுப்பினராக 10 ஆண்டுகளுக்கும் மேலான தொழில்முறை அனுபவம் கொண்ட, நீதவான் மற்றும் உயர்நீதிமன்ற வழக்குகளில் அனுபவம் பெற்ற சட்டத்தரணிகள் பணியமர்த்தப்படுவார்கள். மேலும், எல்லா தொழில் செலவுகள் மற்றும் போக்குவரத்து செலவுகளையும் அந்த சட்டத்தரணிகள் ஏற்கப் போகின்றனர்.

இந்த நடவடிக்கை, சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய சட்ட நடவடிக்கைகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும், சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் முக்கியப் பங்கு வகிக்குமாறு எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# போதைப்பொருளை பிடிக்க புதிய தொலைபேசி இலக்கம்

கொழும்பு, பெப். 04

நாட்டில் குற்றவாளிகள், போதைப்பொருள் கடத்தல் மற்றும் பிற சட்டவிரோத செயற்பாடுகளை முறியடிக்க பொது மக்களின் ஒத்துழைப்பை பெறும் நோக்கில், பொலிஸ் தலைமையகம் புதிய அவசர தொலைபேசி சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

குற்றவாளிகள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்கள் தொடர்பான தகவல்களை பொலிஸாருக்கு வழங்குவதில் மக்களுக்கு ஏற்கனவே சந்தேகம் இருந்த நிலையில், தகவல் வழங்குபவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வகையில் புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, தகவல் அளிக்க விரும்பும் பொதுமக்கள் தங்களது அடையாளத்தை வெளிப்படுத்தாமல், குறித்த குற்றச் செயற்பாடுகள் குறித்து பொலிஸாருக்கு தெரிவிக்கலாம். இதற்காக, 1997 என்ற புதிய அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சேவை, குற்றச்செயல்களை குறைத்து, நாட்டில் சட்ட ஒழுங்கை பேணுவதற்கு பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# கோயிலை புனரமைப்புச் செய்தவர் தூண் உடைந்து விழுந்ததில் மரணம்

கொழும்பு, பெப்.

இந்து கோவிலில் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர் தலையில் கொங்கிரீட் தூண் உடைந்து விழுந்ததில் சம்பவ இடத்திலேயே அந்நபர் உயிரிழந்ததாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளைப் பகுதியில் அமைந்துள்ள ஒரு இந்து கோவிலில் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வந்த நிலையில், ஏற்பட்ட குறித்த இடரில் 65 வயதுடைய ஒருவர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பண்டாரவளை, கிரேக்வத்த மேல் பிரிவைச் சேர்ந்த 65 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதுப்பித்தல் பணிகளுக்காக கோவிலின் பழைய பகுதிகளை அகற்றும் போது குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தை முடித்தார் என்பதற்காக மகிந்தவை தோளில் சுமக்கமுடியாது

## பிரதி அமைச்சர் எரங்க குணசேகர

கொழும்பு, பெப். 04

**யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தார் என்பதற்காக மகிந்த ராஜபக்ஷவை தோளில் சுமந்து கொண்டே இருக்க முடியாது. கௌரவம் என்பதொன்று இருக்குமாயின் மகிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வ அரச இல்லத்தில் இருந்து வெளியேறவேண்டும் என இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகர தெரிவித்தார்.**

கொலன்னாவ பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாடு என்ற ரீதியில் பொருளாதார மட்டத்தில் மாத்திரம் வங்குரோத்து நிலையடையவில்லை. சமூகக் கட்டமைப்பிலும் வங்குரோத்து நிலையடைந்துள்ளோம். சிறந்த முன்னேற்றத்துக்காகவே கிளின் சிறிலங்கா செயற்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் சகல அமைச்சுகளுக்கும் கிளின் சிறிலங்கா செயற்திட்டத்துக்காக நிதி ஒதுக்கப்படும். அத்துடன் மக்களுக்கும் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக நிவாரணம வழங்கப்படும். சமூக கட்டமைப்பில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்கு கட்டம் கட்டமாக தீர்வு பெற்றுக் கொடுப்போம்.

நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அரச செலவுகள் இயலுமான வகையில் குறைக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பாதுகாப்பு உட்பட செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் தான் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறைக்கப்பட்டு, வழங்கப்பட்ட அரச இல்லங்களை மீளப்பெறுவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க, கோட்டபய ராஜபக்ஷ ஆகியோர் நாகரீகமான முறையில் அரச இல்லத்தில் இருந்து வெளியேறியுள்ளார்கள்.

ஆனால் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, சந்திரிகா பண்டாரநாயக்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் இன்றும் அரச இல்லங்களில் தான் உள்ளார்கள்.



முன்னாள் ஜனாதிபதி மகிந்த யுத்தத்தை முடித்தார் என்பதற்காக அவரை தோளில் சுமந்துக்கொண்டு திரிய முடியாது. அவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளார்கள். தமது பெற்றோரை பிள்ளைகள் தான் பார்த்துக் கொள்ள வேண்டும். மகிந்த ராஜபக்ஷவை பார்த்துக் கொள்வதற்கு அவரது மூன்று பிள்ளைகளுக்கும் முடியாவிடின் அவருக்கும், அவரது பாரியாருக்கும் வீடு வழங்கலாம். ஆனால் அவரது மூன்று பிள்ளைகளையும் அரசாங்கத்தால் பராமரிக்க முடியாது- என்றார். (அ)

# உப்பின் விலையும் உயரும் சாத்தியம்!

கொழும்பு, பெப். 04

இந்தியாவிலிருந்து உப்பு இறக்குமதி செய்வதில் ஏற்படும் செலவுகள் அதிகரித்துள்ளதால் இம்மாதம் உப்பின் விலையும் அதிகரிக்கக்கூடும் என அம்பாந்தோட்டை உப்பு நிறுவனத் தலைவர் டீ.கே.நந்தன திலக தெரிவித்தார்.

அதற்கமைய 400 கிராம் உப்பு பைக்கெற்றின் விலை 120 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் உப்பு பைக்கெற்றின் விலை 180 ரூபாவாகவும் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

சமீபத்திய சீரற்ற காலநிலை காரணமாக உள்ளூர் உப்பளங்கள் சேதமடைந்ததைத் தொடர்ந்து, இந்தியாவிலிருந்து உப்பு இறக்குமதி செய்வதற்கு இரண்டு இறக்குமதியாளர்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியது.

அதற்கமைய இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 1485 மெற்றிக் தொன் முதல் தொகுதி உப்பு கடந்த ஜனவரி 27ஆம் திகதி நாட்டை வந்தடைந்தது.

நாட்டில் நிலவிய மோசமான காலநிலை காரணமாக இவ்வாண்டின் முதலாம் காலாண்டில் உள்நாட்டுச் சந்தையில் வீட்டுத் தேவைகளுக்கும் கைத்தொழில் தேவைகளுக்குமான உப்பு விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்படலாமென அவதானிக்கப்பட்டது.

அதற்குத் தீர்வாக தயார் செய்து சந்தைக்கு விநியோகிப்பதற்கான தீர்வை வரி வீதத்திற்கமைய பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய அனுமதி வழங்குமாறு உப்பு உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதற்கமைய, பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெற்றிக் தொன் உப்பை அரச வர்த்தக கூட்டுத்தாபத்தின் மூலம் இறக்குமதி செய்து உள்நாட்டு உப்பு உற்பத்தியாளர்கள் ஊடாக சந்தைக்கு வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# முன்பிள்ளை பருவ அபிவிருத்தி தொடர்பில் தேசிய கொள்கையை உருவாக்கத் திட்டம்!

கொழும்பு, பெப். 03

முன்பிள்ளை பருவ அபிவிருத்தி தொடர்பாக தேசிய கொள்கையொன்றை உருவாக்குவதற்கான முதல் சுற்று கலந்துரையாடல் பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் இடம்பெற்றுள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்கல்வி அமைச்சில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் அதிகாரிகாரிகளும் இதில் கலந்துக்கொண்டதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அனைத்து முன்பிள்ளை பருவ அபிவிருத்தி நிறுவனங்களையும் ஒரே கொள்கையின் கீழ் செயற்படுத்துவதற்கு தேவையான கொள்கையை தயாரித்து, ஒன்றிணைந்த கொள்கையாக முன்வைத்து அமைச்சரவையில் அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அதிகாரிகளை பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

அடுத்த வருடத்தில் ஒன்று, ஆறு மற்றும் பத்தாம் தரங்களுக்காக புதிய கல்வி மறுசீரமைப்பை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் இந்த முன்பிள்ளை பருவ அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கையை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். (அ)

# மாணவர்களுக்கு பாதணி வவுச்சர்!

கொழும்பு, பெப். 04

பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகள் கொள்வனவு செய்வதற்கான வவுச்சர்கள் வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் 5 ஆம் திகதிக்குள் நிறைவடையும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் உள்ள அனைத்து மாணவர்களுக்கு வவுச்சர்களை விநியோகிக்கும் பணி இறுதிக் கட்டத்தில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது அஸ்வெசும திட்டத்தில் உள்வாங்கப்படாத குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக 6,000 ரூபா உதவித்தொகை வழங்கப்படவுள்ளதாகவும், குறித்த உதவித்தொகையை 5 ஆம் திகதிக்குள் செலுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் இதன் மூலம் சுமார் லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடையவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

250 இற்கும் குறைவான மாணவர்களை கொண்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பாதணி வவுச்சர்கள் வழங்கப்படுவதுடன் அஸ்வெசும திட்டத்தில் உள்வாங்கப்படாத குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இந்த உதவித்தொகை வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரச சேவையாளர்களின் சம்பள உயர்வுக்காக 90 பில்லியன் ரூபா!

கொழும்பு, பெப். 04

அரச சேவையாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்காக எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் 90 பில்லியன் ரூபாவை ஒதுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

தம்புத்தேகம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது அமைச்சர் இதனைக் கூறினார். அரச சேவையில் மாற்றத்தை ஏற்படுத்த எதிர்காலத்தில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாகவும் அவர் இதன் போது சுட்டிக்காட்டினார். (அ)

# மூன்று பேர் வெட்டிப் படுகொலை! அம்பலாந்தோட்டையில் பயங்கரம்!!

கொழும்பு, பெப். 04

வீடு ஒன்றுக்குள் வைத்து மூவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொடூரச் சம்பவம் அம்பலாந்தோட்டை, மாமடல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

6 பேர் கொண்ட குழு வீடு ஒன்றுக்குள் நுழைந்து அங்கிருந்த மூன்று பேரை வெட்டிப் படுகொலை செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்கள் 29, 34 மற்றும் 45 வயதுடையவர்களாவர்.

ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ள நிலையில், ஏனைய இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

சட்டவிரோத மதுபான வியாபாரத்தில் ஈடுபட்ட இரண்டு தரப்பினரிடையே நீண்ட காலமாக நிலவி வந்த தகராறின் விளைவாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ)

# யாழ்ப்பாணத்துக்கு காரிலேயே பயணம் மேற்கொண்டார் அநுர

கொழும்பு, பெப். 04

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அண்மைய யாழ்ப்பாண விஜயத்தின்போது இலங்கை விமானப்படைக்கு சொந்தமான மூன்று விமானங்கள் பயன்படுத்தப்பட்டதாக சமூக ஊடகங்களில் வெளியான செய்திகளை மறுத்து பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஜனவரி 31 ஆம் திகதி ஜனாதிபதியின் பயண ஏற்பாடுகள் தொடர்பில் இணையத்தில் பரவிய செய்திகள் முற்றிலும் தவறானவை என அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த விஜயத்துக்காக விமானப்படையின் விமானங்கள் எதுவும் பயன்படுத்தப்படவில்லை எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது உத்தியோகபூர்வ காரில் பயணித்ததாகவும் அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# புலம்பெயர் தொழில் குறித்து பொதுமக்களுக்கு வழிகாட்டல்

காரைதீவு, பெப். 04

பாதுகாப்பான புலம்பெயர் தொழில் தொடர்பில் பொதுமக்களுக்கு வழிகாட்டல் வழங்கப்பட்டது.



மனித அபிவிருத்தி தாபனம், காரைதீவு பிரதேச செயலகத்துடன் இணைந்து பாதுகாப்பான புலம்பெயர் தொழில் (வெளிநாட்டு வேலை) தொடர்பான நடமாடும் சேவையை காரைதீவு பிரதேச செயலகத்தில் நடத்தியது.

இந்த நடமாடும் சேவையை அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்ததுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.ஏ.அஸிஸ், கல்முனை சட்ட உதவி ஆணைக்குழு சட்ட உத்தியோகத்தர் வீ.ரீ.ஹசினா, காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன், மனித அபிவிருத்தி தாபன உதவி இணைப்பாளர் எம். ஐ. றியால் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் அம்பாறை மாவட்ட காரியாலய அதிகாரிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பல அரசு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

நடமாடும் சேவைக்கு வருகை தந்த பொதுமக்களுக்கு பாதுகாப்பான புலம்பெயர் தொழில் தொடர்பான பிரச்னைகளுக்கான தீர்வுகளும், ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் வழங்கியதுடன் முறைப்பாடுகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. (எ)

# "செயற்பட்டு மகிழ்வுறும்" விளையாட்டு வீடு திறப்பு



கல்முனை, பெப், 04

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 2025 ஆம் கல்வி ஆண்டிற்குப் புதிதாக இணைக்கப்பட்ட மாணவர்களின் "செயற்பட்டு மகிழ்வு றும்" விளையாட்டு வீட்டினை பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம்.றிசாத் திறந்துவைத்தார்.

ஆரம்பப் பிரிவின் பகுதி தலைவர் ரீ. வில்வராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்ச்சியில் பாடசாலையின் பிரதி அதிபர், விஞ்ஞானப் பாட ஆசிரிய ஆலோசகர், மற்றும் ஆரம்பப் பிரிவு ஆசிரி யர்கள், பெற்றோர்கள், மாண வர்கள் கலந்து கொண்டனர். (எ)

# கிளீன் சிறீலங்கா திட்டம் சாய்ந்தமருதில் ஆரம்பம்



சாய்ந்தமருது,

கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் திண்மக் கழிவுகளை பூரணமாக அகற்றுதல் மற்றும் கடற்கரை பிரதேசத்தை சுத்தம் செய்யும் வேலைத்திட்டம் கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ. ரீ.எம். றாபி தலைமையில் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ் வேலைத்திட்டம் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவாவின் பங்குபற்றலுடன் ஆரம்பமானது.

இதன் முதல் கட்டமாக சாய்ந்தமருதில் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டு திண்மக் கழிவுகள் அகற்றப்பட்டன. கடற்கரை பிரதேசமும் சுத்தம் செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கல்முனை மாநகர சபைக்குட்பட்ட ஏனைய பிரதேசங்களிலும் இவ் வேலைத்திட்டம் தொடராக முன்னெடுக்கப்படும் என மாநகர ஆணையாளர் றாபி மேலும் தெரிவித்தார். (எ)

# சாய்ந்தமருது சமூக அபிவிருத்தி அமைப்பின் ஆண்டு நிறைவு, கற்றல் உபகரணம் வழங்கல்





சாய்ந்தமருது, பெப். 04

சாய்ந்தமருது பிரதேச சமூக அபிவிருத்தி அமைப்பின் இரண்டாவது ஆண்டு நிறைவும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் அமைப்பின் தலைவர் ஐ. ஜாபீர் தலைமையில் சாய்ந்தமருது ரியாலுல் ஜன்னா வித்தியாலய கேட்போர் கூடத்தில் கடந்த 01 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொலநறுவை மாவட்ட சிரேஷ்ட நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எஸ்.எம். நவாஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்க ளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (எ)

# வன்முறைகளை கையாள்வதற்கு பொலிஸாருக்கு திறன் பயிற்சிகள்

திருகோணமலை, பெப். 04

பெண்கள், சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் பாலின வன்முறைச் சம்பவங்களின் போது அதனை அணுகுவதற்கான செயல்முறை நிகழ்வொன்று பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக கந்தளாயில் உள்ள தனியார் ஹோட்டலில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் ஒத்துழைப்புடன் திருகோணமலையில் இயங்கி வரும் பெண்களுக்கான சுதந்திர அமைப்பான ஈ - வின்ங் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்ததுடன் குறித்த திட்டத்தை ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி பங்களிப்பில் ஆசிய பௌண்டேசன் மற்றும் தேவை நாடும் மகளிர் அமைப்பு ஆகியன இணைந்து அமுல்படுத்தி வருகின்றன. இதில் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த கந்த ளாய், சேருவில, தம்பலகாமம், மூதூர் ஆகிய பொலிஸ் நிலை யங்களில் பெண்கள், சிறுவர் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

வன்முறைச் சம்பவங்களை குறைத்து மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான புதிய பொறிமுறைகளை இதன்மூலம் எப்படி உருவாக்குவது தொடர்பிலும் பாலின அடிப்படை தொடர்பாக தாங்கள் கையாளும் முறை பற்றியும் குறித்த கலந்துரையாடலில் ஆராயப்பட்டன.(எ)

# பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகள்



கல்முனை, பெப். 04

கல்முனை அபிவிருத்திக்கும் முகாமைத்துவத்துக்குமான சபையின் ஏற்பாட்டில் 80 மாணவர்களுக்கு பாடசாலைக் கான பாதணிகள் வழங்கப்பட்டன.

கல்முனை மையோன் மாவத்தையில் உள்ள திருமண மண்டபத்தில் கல்முனை அபிவிருத்திக்கும் முகாமைத்துவத்துக்குமான சபையின் தலைவர் யு.எம். நிசார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ரி.எம்.எம். அன்சார் பிரதம விருந் தினராக கலந்துகொண்டார்.

# நல்ல மனப்பாங்கு விருத்தியை பெற்றோர் உருவாக்க வேண்டும்

## மருத்துவர் ரஹ்மான் அறிவுரை

கல்முனை, பெப். 04

நல்ல மனப்பாங்கு விருத்தியை பெற்றோர்கள் உருவாக்க வேண்டும் என்று மருத்துவர் ஏ.எல்.எப். ரஹ்மான் அறிவுரை வழங்கியுள்ளார்.

தரம் - 01 மாணவர்களுக்கான மகழ்ச்சிகரமான வித்தியாரம்ப விழா கல்முனை அஸ்-ஸுஹறா வித்தியாலயத்தில் அதிபர் எம்.எச்.எஸ். ஆர்.மஜீதிய்யா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனை அத்தியட்சகர், மருத்துவர் ஏ.எல்.எப். ரஹ்மான் கலந்துகொண்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், "பெற்றோர்கள் பிள்ளைகளை ஒழுக்க விழுமியம் மிக்கவர்களாக உருவாக்க வேண்டும்.

நாட்டின் அபிவிருத்திக்குப் பொருத்த மான ஆரோக்கியமுள்ள சுகதேகிகளாகவும் நேர்மனப்பாங்கு சிந்தனையுள்ள நற்பிரஜைகளாகவும் உருவாக்க வேண்டும்." புன்னகைக்கும் முகங்களுடன் எங்கள் குழந்தைகள் பாடசாலைக்கு செல்கிறார்கள்" என்ற கருப்பொருளை உள்வாங்கி பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு சிறந்த சூழல், நேரமுகாமை, ஆரோக்கியமான உணவு என அனைத்தையும் பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியில் ஏற்படுத்தி ஆரோக்கியமான ஒழுக்க விழுமியங்களை கட்டி எழுப்பவும் சமநிலை ஆளுமையை வழங்கவும் வழிகாட்ட வேண்டும்" - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுக்கு பதிலடி எம்மிடம் வேறு வழியில்லை!

## கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவிப்பு

ஒட்டாவா, பெப். 04

**அமெரிக்காவின் வரி விதிப்புக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. கனடாவின் நடவடிக்கையால் அமெரிக்கர்களும் நிச்சயம் பாதிக்கப்படுவார்கள் என்று கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.**



கனடாவில் இருந்து இறக்குமதியாகும் அனைத்து பொருட்களுக்கும் 25 சதவீதம் வரி விதிக்கும் உத்தரவில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்ட சில மணி நேரங்களுக்கு பின்பு ட்ரூடோ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஒட்டாவாவில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் கூறுகையில், "நார்மண்டி கடற்கரை முதல் கொரிய தீபகற்பத்தின் மலைகள் வரை ப்ளாண்டர்ஸ் நிலப்பரப்பு முதல் காந்தஹார் வீதிகள் வரை உங்களின் இருண்ட காலங்களில் உங்களுடன் நாங்களும் இணைந்து போராடி இறந்துள்ளோம்.

ஆம், கடந்த காலங்களில் நமக்குள் வேறுபாடுகள் இருந்தன.ஆனால், அவற்றைக் கடந்து செல்வதற்கான வழிகளை நாம் கண்டறிந்துள்ளோம்.

நான் முன்பே கூறியது போல, டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவுக்கு பொற்காலத்தை கொண்டு வர விரும்பினால், அதற்கு சிறந்த வழி கனடாவுடன் கூட்டு சேர்வதே தவிர எங்களைத் தண்டிப்பது இல்லை.

நாங்கள் எதனையும் அதிகரிக்க விரும்பவில்லை. ஆனால், கனடாவுக்காக, கனடா மக்களுக்காக, வேலைவாய்ப்புகளுக்காக நாங்கள் போராடுவோம்.

கனடாவுக்கு எதிரான வரி விதிப்பு அமெரிக்கர்களின் வேலை வாய்ப்பை ஆபத்தில் ஆழ்த்தும்.

அமெரிக்க வாக னங்கள் உருவாக்கும் ஆலைகள் மற்றும் பிற உற்பத்தி வசதி களை மூடுவதற்கு வழி வகுக் கும். அவை கடைகளில் உணவுப்பொருட்கள் மற்றும் எரிவாயுக்களின் விலைகளை அதிகரிக்கச் செய்யும்"-என்றார். (எ)

# இந்தியா - ரஷ்யா முக்கிய சந்திப்பு

மொஸ்கோ, பெப். 04

முக்கியமான பேச்சுவார்த்தைகளுக்காக இந்தியா செல்லவுள்ளதாக ரஷ்ய பாராளுமன்ற கீழ் சபை தலைவரான வியாசெஸ்லாவ் வோலோடின் தெரிவித்துள்ளார்.



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் நெருங்கிய கூட்டாளியான வோலோடின் தனது ரெலிகிராம் பக்கத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இவ்வாறு பதிவிட்டிருந்தார். "இந்தியாவில் முக்கியமான சந்திப்புகள் மற்றும் பேச்சுவார்த்தைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

இந்தியா ஒரு முக்கிய கூட்டாளி. அதனுடன் எங்களுக்கு நீண்ட கால நம்பிக்கை மற்றும் பரஸ்பர நன்மையளிக்கும் ஒத்துழைப்பு - உறவுகளும் உள்ளன. அனைத்துத் துறைகளிலும் உறவுகளை வளர்ப்பது அவசியம்"- என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்திய வெளிவிவகாரத்துறை செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால், ரஷ்யாவில் இந்தியர்கள் மாயமான விவகாரம் குறித்து பேசியிருந்தார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் ரஷ்யா - உக்ரைன் இடையே போர் நடைபெற்று வருகிறது. படையினர் பற்றாக்குறையால் ரஷ்யா வெளிநாட்டவர்கள் பலரை தங்கள் இராணுவத்தில் இணைத்துக் கொள்கிறது. இதன் பின்னணியில் பெரிய மோசடி இடம்பெறுகிறது என்று விமர்சிக்கப்பட்ட நிலையிலேயே வோலோடின் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். (எ)

# குடிசைகள் இடிக்கப்படாது , திட்டங்கள் நிறுத்தப்படாது

## ஆம் ஆத்மிக்கு பிரதமர் மோடி பதிலடி

புதுடில்லி, பெப். 04

டில்லியில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் இங்குள்ள குடிசை பகுதிகள் இடிக்கப்படாது, எந்த நலத்திட்ட உதவிகளும் நிறுத்தப்படாது என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார். டில்லியில் உள்ள குடிசைப்பகுதிகளை பா.ஜ.க. குறிவைத்துள்ளது, அக்கட்சி ஆட்சிக்கு வந்தால் குடிசைகள் அழிக்கப்படும், நலத்திட்ட உதவிகள் நிறுத்தப்படும் என்ற ஆம் ஆத்மி கட்சியின்



வந்தால் தேசியத் தலைநகரில் உள்ள குடிசைவாசிகளுக்கு 15 (இலங்கை மதிப்பில்) ரூபாய்க்கு சத்தான உணவு வழங்கப்படும் என்று உறுதியளிக்கிறேன். அதேபோன்று ஓட்டோ சாரதிகள், தொழிலாளர்களுக்கு நலவாரியம் அமைக்கப்படும். அவர்களுக்கு 30 இலட்சம் ரூபாய் காப்பீடு திட்டம் வழங்கப்படும். அவர்களுடைய குழந்தைகளின் கல்வி கட்டணத்துக்கும் பா.ஜ.க.அரசு உதவிகள் செய்திடும்.

நான் உங்களுக்கு இன்னுமொரு உத்தரவாதமும் தருகிறேன். அந்த பேரழிவுக்கார்கள் கூறுவதுபோன்று, பா.ஜ.க. ஆட்சியில் டில்லியில் உள்ள எந்தவொரு குடிசையும் இடிக்கப்படாது. டில்லி மக்களுக்கான எந்தவொரு நலத்திட்ட உதவிகளும் நிறுத்தப்படாது" - என்றார். (எ)

# உகண்டாவில் மீண்டும் வேகமெடுக்கும் எபோலா

## சுகாதார அவசர நிலை அறிவிப்பு

உகண்டா, பெப். 04

கிழக்கு ஆபிரிக்க நாடான உகண்டாவில் எபோலா வைரஸ் தொற்று வேகமாக பரவி வருகிறது.

இந்த ஆண்டில் இதுவரை 40இற்கும் மேற்பட்டோருக்கு எபோலா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது. அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனையடுத்து அங்கு சுகாதார அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

2014 முதல் 2016ஆம் ஆண்டு வரை எபோலா தொற்றால் சுமார் 11 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். பின்னர் இந்த வைரஸ் தொற்று கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (எ)

# குளிரில் உறைந்தது உலகப் புகழ் பெற்ற நயாகரா நீர்வீழ்ச்சி

வாஷிங்டன், பெப். 04


அமெரிக்காவில் நிலவி வரும் கடும் குளிர் காரணமாக உலகப் புகழ் பெற்ற நயாகரா நீர்வீழ்ச்சி பாய்ந்து செல்லும் இடங்களில் பனிபடர்ந்து காட்சி அளிக்கிறது.

வெள்ளைப் போர்வை போர்த்தியது போன்று காணப்படும் நயாகரா அருவியின் அழகை நேரில் காண அமெரிக்கா மற்றும் கனடாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் படையெடுத்து வருகின்றனர்.

உறைபனிக்கு மத்தியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டும் காட்சிகள் இணையத்தில் வெளியாகி கண்களை கவர்ந்து வருகின்றன.

கடுமையான குளிரால் நீர்வீழ்ச்சியின் சிலபகுதிகள் உறைந்தும் பனிப்பொழிவால் மூடப்பட்டும் காட்சியளிக் கின்றன. மேற்பகுதி உறைந்த நிலையில் காணப்பட்டாலும் நீர்வீழ்ச்சி முழுமையாக உறையவில்லை. எனவே, அடிப்பகுதியில் நீரோட்டம் நீடிக்கிறது. (எ)

# கிளர்ச்சியாளர்கள் வெறிச்செயல் கொங்கோவில் 775 பேர் மரணம்



கோமா, பெப். 04

கொங்கோவின் கிழக்கில் உள்ள கோமா நகரத்தில் ருவாண்டா ஆதரவு கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட தாக்குதலை தொடர்ந்து இடம்பெற்ற மோதல் காரணமாக 775 பேர் உயிரிழந்தனர் என கொங்கோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நகரம் தற்போது கிளர்ச்சியாளர்களின் பிடியில் உள்ளது.

எனினும், ஏனைய பகுதிகளை நோக்கி கிளர்ச்சியாளர்கள் நகர்வதை கொங்கோ இராணுவம் தடுத்து நிறுத்தியுள்ளது.

இதேவேளை, சில கிராமங்களை கிளர்ச்சியாளர்களிடமிருந்து இராணுவம் மீட்டுள்ளது என கொங்கோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோமா நகரின் மருத்துவமனைகளில் 773 உடல்கள் உள்ளன. 2800 பேர் இதுவரை காயமடைந்துள்ளனர் என கொங்கோ அரசாங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (எ)

# துப்பாக்கி குண்டு காயத்துக்கு சிறு கட்டு போட்ட அரசாங்கம்

## பட்ஜெட் குறித்து ராகுல் காந்தி விமர்சனம்

புதுடில்லி, பெப்.04

துப்பாக்கி குண்டு காயங ண்களுக்கு சிறு கட்டு போடுவது போன்று மத்திய பட்ஜெட் உள்ளது என ராகுல் காந்தி விமர்சனம் செய்துள்ளார். 2025 - 26ஆம் நிதியாண்டுக்கான இந்திய மத்திய பட்ஜெட்டை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்.

இதுகுறித்து மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி காந்தி தனது எக்ஸ் பதிவில், "துப்பாக்கி தோட்டா காயங்களுக்கு சிறு கட்டு போடுவது போல் மத்திய



பட்ஜெட் உள்ளது. உலகளாவிய நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில், நமது பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு ஒரு முன்னுதாரண மாற்றம் தேவைப்பட்டது. ஆனால், இந்த அரசாங்கம் யோசனைகள் இல்லாமல் திவாலாகி விட்டது" என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# ஜூனியர் மகளிர் உலக கிண்ணம் மீண்டும் சம்பியனானது இந்தியா!




கோலாலம்பூர், பெப். 04

ஜூனியர் மகளிர் ரி - 20 உலகக் கிண்ணத்தை இந்திய அணி மீண்டும் சுவீகரித்தது.

2ஆவது ஜூனியர் மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி தொடர் (19 வயதுக்கு உட்பட்டோர்) மலேசியாவில் நடைபெற்றது. இதில், கோலாலம்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் நடப்பு சம்பியன் இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் மோதின.

இதில், நாணயச்சூழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி இந்திய பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் திணறியது. தென்னாபிரிக்க வீராங்கனைகளை இணைப்பாட்டம் அமைக்க விடாமல் இந்தியா சீரான இடைவெளியில் விக்கெட்களை வீழ்த்தியது.

20 ஓவர்கள் முழுமையாக விளையாடிய அந்த அணி 82 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் இழந்தது. தென்னாபிரிக்க அணி சார்பில் அதிகபட்சமாக மீகே வான் வூர்ஸ்ட் 23 ஓட்டங்கள் அடித்தார். இந்தியா தரப்பில் கங்கோடி திரிஷா 3 விக்கெட்களும், வைஷ்ணவி சர்மா, ஆயூஷி சுக்லா மற்றும் பருனிகா சிசோடியா ஆகியோர் தலா 2 விக்கெட்களும் வீழ்த்தி அசத்தினர்.

இதனையடுத்து, 83 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்தியா 11. 2 ஓவர்களில் ஒரு விக்கெட் மட்டும் இழந்து 84 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக திரிஷா 44 ஓட்டங்கள் எடுத்தார். இதன் மூலம் தொடர்ந்து 2ஆவது முறையாக இந்தியா சம்பியன் பட்டத்தை வென்று அசத்தியது. (எ)

# 150 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா இமாலய வெற்றி

## ரி - 20 தொடரை இழந்தது இங்கிலாந்து

மும்பை, பெப். 04

இங்கிலாந்துக்கு எதிரான 5ஆவது ரி - 20 போட்டியில் இந்தியா 150 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றியை பெற்றது.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடியது.

இதில், 4 போட்டிகள் முடிவடைந்த நிலையில் இந்திய அணி 3 - 1 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றி விட்டது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 5ஆவது மற்றும் கடைசி போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 247 ஓட்டங்கள் குவித்தது.

இந்தியா தரப்பில் அதிகபட்சமாக அபிஷேக் சர்மா 135 ஓட்டங்கள் எடுத்தார். இதையடுத்து 248 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன்களமிறங்கிய இங்கிலாந்து, இந்திய அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை பறிகொடுத்தது. 10. 3 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த இங்கிலாந்து அணி 97 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது.

இதன் மூலம் 150 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்ற இந்தியா 4 - 1 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றி அசத்தியது. (எ)

# 37 பந்தில் சதம் அடித்து அபிஷேக் சர்மா அசத்தல்

## 13 சிக்ஸர்கள் விளாசல்

மும்பை, பெப். 04

இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் 37 பந்தில் சதம் அடித்து அசத்தினார் அபிஷேக் சர்மா.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடியது.

5ஆவது மற்றும் கடைசி போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் சிக்ஸர் மழை பொழிந்த அபிஷேக் சர்மா 37 பந்தில் சதம் அடித்து அசத்தினார்.

5 பௌண்ட்ரிகள், 10 சிக்ஸருடன் 100 ஓட்டங்களைக் கடந்தார்.

இதன்மூலம் ரி - 20 சர்வதேச போட்டிகளில் அதிவேகமாக சதம் அடித்த 2ஆவது இந்திய வீரரானார். முன்னதாக ரோஹித் சர்மா 35 பந்துகளில் சதம் அடித்திருந்தார். தொடர்ந்து வாணவேடிக்கை காட்டிய அபிஷேக் சர்மா, 54 பந்துகளில் 7 பௌண்டரிகள், 13 சிக்ஸருடன் 135 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

சர்வதேச ரி - 20 இல் ஒரே போட்டியில் அதிக சிக்ஸர்கள் அடித்த இந்திய வீரர்கள் பட்டியலிலும் அபிஷேக் சர்மா இடம்பிடித்துள்ளார்.

அவர் இந்த போட்டியில் 13 சிக்ஸர்கள் எடுத்துள்ளார்.

இவருக்கு அடுத்த இடத்தில் ரோஹித் சர்மா, சஞ்சு சாம்சன், திலக் வர்மா ஆகியோர் தலா 10 சிக்ஸர்களுடன் உள்ளனர். (எ)




# பாகிஸ்தான் அணி தெரிவு சரியில்லை

## வசிம் அக்ரம் விமர்சனம்

லாகூர், பெப். 04

பாகிஸ்தான் அணி தெரிவு சரியில்லை என்று அந்த நாட்டின் முன்னாள் ஜாம்பவான் வீரர் வசிம் அக்ரம் விமர்சித்துள்ளார்.

9ஆவது சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி முதல் மார்ச் 9ஆம் திகதி வரை பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெறவுள்ளது. இதில், பங்கேற்கும் 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. "ஏ" பிரிவில் நடப்பு சம்பியன் பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், நியூசிலாந்து அணிகளும், "பி" பிரிவில் ஆப்கானிஸ்தான், அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, இங்கிலாந்து அணிகளும் இடம் பெற்றுள்ளன. 19ஆம் திகதி கராச்சியில் நடைபெறும் தொடக்க லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன.

இந்தத் தொடருக்கான அணிகளை அனைத்து கிரிக்கெட் சபைகளும் அறிவித்து விட்டன. இதில், கடைசியாக பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டது. முகமது ரிஸ்வான் தலைமையிலான அந்த அணியில் பாபர் அஸாம், ஹரிஸ் ரவுப், ஷாகீன் ஷா அப்ரிடி உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

ஆனால், இந்த அணியில் பஹீம் அஷ்ரப், குஷ்தில் ஷா சேர்க்கப்பட்டுள்ளது அந்த நாட்டின் முன்னாள் வீரர்களிடையே விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து வசிம் அக்ரம் கூறுகையில்,"கடந்த சில மாதங்களாக பஹீம் அஷ்ரப் துடுப்பாட்ட சராசரி 8 ஆகவும், பந்துவீச்சு சராசரி 100 ஆகவும் உள்ளது. இது தவிர, குஷ்தில் ஷாவின் செயல்திறனும் சிறப்பாக இல்லை. நாங்கள் ஒரு சுழற்பந்து வீச்சாளரை மட்டுமே தெரிவு செய்துள்ளோம், ஆனால், இந்தியா 4 சுழற்பந்து வீச்சாளர்களைத் தெரிவு செய்துள்ளது. அந்த வகையில் எங்கள் அணி தெரிவு சரியில்லை"-என்றார். (எ)



# இந்திய அணி சாதனை

புனே, பெப். 04

இங்கிலாந்து அணிக்கு எதிரான 5ஆவது ரி - 20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 150 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அத்தோடு, 4 - 1 என்ற கணக்கில் இந்தியா தொடரைவென்றுள்ளது.

இதன் மூலம் சொந்த மண்ணில் இந்திய அணி தொடர்ந்து 17ஆவது ரி - 20 தொடரை வென்று சாதனை படைத்துள்ளது. (எ)

# பொறுப்பற்ற துடுப்பாட்டமே படுதோல்விக்கு காரணம்

## சனத் ஜெயசூரிய கவலை




காலி, பெப். 04

பொறுப்பற்ற துடுப்பாட்டமே காலி டெஸ்ட் போட்டியில் படுதோல்வி அடைய காரணம் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

போட்டியின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"இந்த மைதானம் அவ்வளவு கடினமானது அல்ல. வீரர்கள் தன்னம்பிக்கையாக விளையாடுவது பற்றி தெரிந்திருக்க வேண்டும். டெஸ்ட் கிரிக்கெட் ஒரு தனித்துவமான விளையாட்டு. இங்குதான் ஒவ்வொரு வகையான சூழ்நிலை வருகிறது. அந்த சூழ்நிலையை நாம் கட்டுப்படுத்த வேண்டும். உங்கள் பந்து வீச்சுத் திறனை மேம்படுத்த வேண்டும். எங்களிடம் நல்ல துடுப்பாட்ட வரிசை உள்ளது. எனவே, நாங்கள் நன்றாக துடுப்பெடுத்தாடவில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். துடுப்பாட்ட வீரர்கள் எவ்வாறு சதங்கள் பெறுவது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். எனவே, அடுத்த டெஸ்ட் போட்டியானது ஒரு நல்ல போட்டியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்"-என்றார்.

அவுஸ்திரேலியா - இலங்கை இடையே நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா அபார வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதீத...

அதீத போதை காரணமாகவே உயிரிழப்பு ஏற்பட்டதாக கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த இளைஞன் சிறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த நிலையில் ஓரிரு நாட்களுக்கு முன்னரே விடுவிக் கப்பட்டவர் ஆவார்.

சிறையில் இருந்து வெளியே வந்த பின்னர் நண்பர்களுடன் இணைந்து போதையை நுகர்ந்த நிலையிலையே , அதீத போதை காரணமாக சுகவீனமடைந்ததாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

## ட்ரம்பின்...

நிறுவனங்கள் நிதியுதவி நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து தங்கள் திட்டங்களைத் தக்கவைக்க போராடுகின்றன.

மனித உரிமைகள், நல்லாட்சி மற்றும் பெண்கள் மற்றும் பாலின உரிமைகள் ஆகியவற்றில் பணிபுரியும் கணிசமான எண்ணிக்கையிலான இலங்கை அரசசார்பற்ற நிறுவனங்கள் யு.எஸ். எயிட் நிதியுதவியிலேயே இயங்குகின்றன.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட தன்னார்வ நிறுவனங்கள், "அமெரிக்காவின் இந்த முடிவு எங்களை சிக்கலுக்குள் தள்ளியுள்ளது. நாங்கள் ஊழியர்களை வெளியேற்றியுள்ளோம், மேலும் இந்த நிதி தடை தொடர்ந்தால், பல திட்டங்கள் சரிந்துவிடும்," என்று கவலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வடக்கு...

நெல்லின் நிர்ணய விலையை அறிவிப்பதாக கூறுகின்ற அதே நேரம், அநுராதபுரம் மற்றும் ஏனைய பகுதிகளில் நெல் அறுவடை முடிந்த பின்னரே நெல்லுக்கு நிர்ணய விலையை தாம் தெரிவிப்பதாகக் கூறியுள்ளார்.

அநுராதபுரத்தில் உள்ள விவசாயிகள் மாத்திரமே விவசாயிகள் என்றும் வடக்கு - கிழக்கில் உள்ள விவசாயிகளை விவசாயிகள் போல் தெரியவில்லையா?

நெல்லுக்கான நிர்ணய விலையை அரசாங்கம் குறைவாக நிர்ணயிக்க உள்ளதாக அறிகிறோம். இதனால் விவசாயிகள் விவசாயத்திற்காக செலவு செய்த முதலீடுகளை மீள பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படும்.

எனவே அரசாங்கம் விவசாயிகள் நட்டத்தை எதிர் நோக்காத வகையில் கூடிய விலை நிர்ணயத்தை தீர்மானிக்க வேண்டும்.

அவ்வாறு செய்யவில்லை என்றால் ஏனைய தனியார் நெல் கொள்வனவு செய்கின்றவர்கள் அரசாங்கத்தை விட மிகவும் குறைவாகவே நெல்லை பெற்றுக்கொள்ள விலையை அவர்கள் தீர்மானிப்பார்கள்.

எனவே கூடிய அளவிலான விலையை நெல்லுக்கு அரசாங்கம் தீர்மானிக்கின்றபோது தனியார் நெல் கொள்வனவு செய்கிறவர்களும் கூடுதலான விலைக்கு நெல்லை கொள்வனவு செய்வார்கள்.

விவசாயத்துக்காக விவசாயிகள் வங்கிகளில் கடனைப் பெற்றும் நகைகளை வங்கியில் அடமானம் வைத்தும் பணத்தை பெற்று விவசாயத்தை முன்னெடுத்துள்ளனர்.

வறுமைக்கோட்டின் கீழ் உள்ள விவசாயிகளை நாங்கள் தூக்கி விடுவதாக இருந்த ால் அவர்களின் நெல்லுக்கான உரிய விலை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

எனவே புதிய அரசாங்கம் சாக்குப் போக்கு கூறாமல் நெல்லின் விலையை நிர்ணயம் செய்து அழிவில் இருந்து கொண்டுள்ள விவசாயிகளை தூக்கி விடவேண்டும் என்பதே எமது கோரிக்கையாக உள்ளது.

இலங்கை கடற்பரப்புக்குள் நுழையும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களின் உடைமைகள் பறிமுதல் செய்யப்படவேண்டும். ஆனால் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது - என்றார். (அ)

## கடைகளுக்கு...

பட்டது.

இதில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ். மாநகர சபை ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜயசிங்க, யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயமஹா ஆகியோர் பங்கேற்றனர்.

யாழ்ப்பாண நகரிலுள்ள வர்த்தக நிலையங்களின் முன்பாக, பொருட்களை வைத்து விற்பனை செய்ய வேண்டாம் எனவும், வர்த்தக நிலையத்தின் முன்பாகவுள்ள வடிகால்களை துப்புரவாக வைத்திருப்பது, அந்தந்த வர்த்தக நிலைய உரிமையாளர்களின் பொறுப்பு எனவும், யாழ். மாநகர சபை ஆணையாளர், வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு சுட்டிக்காட்டினார்.

வர்த்தக நிலையங்களில் குப்பைகளை சேர்த்து வைக்குமாறும், தினமும் இரு தடவைகள், மாநகர சபையால் அவை பெற்றுக் கொள்ளப்படும் எனவும் வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதேபோன்று, வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வாகனங்களை நிறுத்துவதை அனுமதிக்க வேண்டாம் என, பொலிஸார் அறிவுறுத்தினர்.

எதிர்காலத்தில், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில், கடைகளுக்கு பொருட்களை இறக்குவதற்கான நேரத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும், நகரின் சில வீதிகளை ஒருவழியாக மாற்றுவதற்கும் ஆலோசிக்கப்பட்டது.

இதன் போது, யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தை சூழவுள்ள பகுதிகளையும், வடக்கு மாகாண ஆளுநர் பார்வையிட்டதுடன், பேருந்து நிலையத்தை சுற்றி உட்புறமாக அமைக்கப்பட்டுள்ள கடைகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிட்டார். (அ)

## ஆனந்த...

பிரதிவாதியான ஆனந்த விஜேபால பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதியால் கடந்த நவம்பர் மாதம் 18ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து, கடந்த டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி வெளியான சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் ஆனந்த விஜேபால ஜனாதிபதியின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டதாக செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

பின்னர் இது தொடர்பில் தான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிக்கை விடுத்த நிலையில் அங்கு அமைச்சர் ஆனந்த விஜேபால ஜனாதிபதியின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 91ஆவது சரத்தின்படி, அரசாங்க சேவையில் உள்ள ஒருவர், பாராளுமன்றத்தில் அமர்ந்து வாக்களிக்க தகுதியற்றவர் என மனுதாரர் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் தலைமை அதிகாரி பதவி என்பது ஒரு அரசாங்க பதவி என்றும், அதன்படி, அமைச்சர் ஆனந்த விஜேபால அத்தகைய பதவியை வகிக்கும் அதே வேளையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க தகுதியற்றவர் என்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியலமைப்பின்படி அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் பதவி வகிக்க தகுதியற்றவர் என்று தீர்ப்பளிக்கவும், அவரது பதவியை செல்லாததாக்கும் தீர்மானத்தை எடுக்கவும் மனுதாரர் நீதிமன்றத்தை கோரியுள்ளார்.

மேலும், இந்த மனு விசாரிக்கப்பட்டு இறுதி முடிவு அறிவிக்கப்படும் வரை ஆனந்த விஜேபால பாராளுமன்ற உறுப்பினராக அமரவும், பாராளுமன்றத்தில் வாக்களிக்கவும் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது. (அ)

# பிரதி அமைச்சருக்கு மீனவர்கள் எதிர்ப்பு

கொழும்பு, பெப். 04

மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்துக்கு விஜயம் செய்த கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே, எரிபொருளுக்கு நியாயமான விலை கோரி மீனவர்களின் எதிர்ப்புக்கு ஆளாகினார்.

"ஒரு லீற்றர் எரிபொருளை 100 ரூபாய்க்கு வழங்குவதாக அரசாங்கம் ஏற்கனவே உறுதியளித்துள்ளது, அதன்படி விலை குறைக்கப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். கடந்த ஆண்டு முதல் போராட்டம் நடத்தி வருகிறோம், ஆனால் எங்கள் கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படவில்லை " என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

எரிபொருள் விலையேற்றம் காரணமாக தமது வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாதுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் மீனவர்களுக்கு பிரதி அமைச்சர் எதுவித பதிலும் வழங்கவில்லை. (அ)

## சுதந்திர...

இணைத்துக்கொள்ளப்படமாட் டாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கையின் 77ஆவது சுதந்திர தின விழா, நாட்டின் புதிய யுகத்தை ஆரம்பிக்கின்ற சுதந்திர விழாவாக இருக்கும் என பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அபயரத்ன அண்மையில் தெரிவித்திருந்தார்.

அத்துடன், அத்தியாவசியமான செயற்பாடுகளுக்கு மாத்திரம் வரையறுத்து, மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைக் குறைத்து, இம்முறை சுதந்திர தின விழா இடம்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் சுதந்திர தின வைபவத்தைப் பார்ப்பதற்கு அதிகமாக இடவசதிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

## ஆர்ப்பாட்டங்களை

மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன், ஞானமுத்து சிறிநேசன், இளையதம்பி சிறிநாத், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் அ.அமலநாயகி, சிவில் சமூக செயற்பாட்டாளர் இ.செல்வகுமார் உள்ளிட்ட எழுவருக்கு இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, தமிழர்களுக்கான உரிமையினை வலியுறுத்தி சுதந்திர தினத்தை கறுப்பு தினமாக அறிவித்து வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் வடக்கு-கிழக்கில் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

இன்று மட்டக்களப்பில் பேரணிக்கும் போராட்டத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதில் மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்கேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று காந்திபூங்காவில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதனைப் பாதிக்கும் வகையிலான எந்தவொரு செயற்பாடுகளுக்கும் மட்டக்களப்பு நீதிமன்ற நியாதிக்க எல்லைக்குள் அனுமதியளிக்காத வகையில் பொலிஸாரால் இந்த தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது. (அ)

## சுரேஷ்...

கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் சூத்திரதாரி இருப்பதாகவும் அவரை கைது செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது என்பதை அனைவரும் அறிவர்.

இந்த தாக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் இந்த அரசாங்கத்தினுள் இருக்கின்றமையினால் அவர்களை பாதுகாக்கும் நோக்கில் இந்த அரசாங்கம் வேறு ஒருவரை சூத்திரமாரியாக சித்தரிக்க எத்தனிக்கின்றது.அது மாத்திரமல்லாது அவர்களைப் பாதுகாக்கும் முயற்சியையும் அரசாங்கம் மேற்கொள்கின்றது.அதனைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் புதிய விடயமொன்றை சித்தரிக்க முயல்கின்றது.

நாட்டின் புலனாய்வு அதிகாரியே உயிர்த்த ஞாயிறு தினத்தில் தாக்குதலை மேற்கொண்டதாகவும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டு வரும் நோக்கிலேயே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் சித்தரிக்க எத்தனிக்கின்றனர்.

அப்போதைய புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலே மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரை கைது செய்யும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. அதன் காரணமாகவே புலனாய்வு அதிகாரியே தாக்குதலை நடத்தியதான கருத்தை சமூகத்தினுள் விதைக்க அரசாங்கம் எத்தனிக்கின்றது - என்றார். (அ)

## கைதான...

விடுதலை செய்யப்பட்டனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த 8 ஆம் திகதி படகுடன் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 10 பேரின் வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நீதவான் நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த மாதம் 23 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நேற்று வரை இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. நேற்று சிறைச்சாலை அதிகாரிகளால் 10 மீனவர்களும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை ஆராய்ந்த நீதவான் 10 பேரில் இருவர் சிறுவர்கள் என்பதால் அவர்களை வழக்கிலிருந்து முழுமையாக விடுதலை செய்ய உத்தரவிட்டார். அத்துடன் ஏனைய 8 பேருக்கம் ஆறு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருடச் சிறை தண்டனை வழங்கி நிபந்தனயுடன் விடுதலை செய்தார்.

இந்த எட்டு பேரில் ஒருவர் படகோட்டி என்பதால் அவருக்கு ஆறு மாத கடூழியச் சிறைத்தண்டனை வழங்க உத்தரவிடப்பட்டது. அத்துடன் படகோட்டிக்கு 40 இலட்சம் ரூபா அபராதத் தொகையும் விதிக்கப்பட்டது. இதனைச் செலுத்த தவறின் மேலும் 3 மாதச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதவான் நளினி சுபாஸ்கரன் உத்தரவிட்டார். (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## சட்டவிரோத தொழிலில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 10 பேர் கைது!

மன்னார், பெப். 04

தலைமன்னாருக்கு தெற்காகவுள்ள கடற்பகுதியில் இன்று அதிகாலை சட்டவிரோதமாகக் கடற்றொழில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 10 இந்திய மீனவர்களைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இதன்போது, இழுவை படகொன்றும் கைப்பற்றப்பட்டதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

கைதான மீனவர்களைக் கரைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் மண்டபத்தைச் சேர்ந்த 10 மீனவர்களே இவ்வாறு கைதாகியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, கடந்த ஒரு வார காலப்பகுதியினுள், இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மொத்தமாக 57 இந்திய மீனவர்கள் கைதாகியுள்ளதாக கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## அரசியல் பழிவாங்கல் செயல்களை நீதிமன்றம் ஊடாக தோற்கடிப்போம்!

### நாமல் ராஜபக்ஷ அறிவிப்பு

கொழும்பு, பெப். 04

**அரசியல் பழிவாங்கல் செயற்பாடுகளை நீதிமன்றத்தின் ஊடாக தோற்கடிப்போவதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

நாமலுடன் கிராமத்துக்கு கிராமம் எனும் தொனிப்பொருளில் அநுதாரபுரத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே நாமல் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சந்தையில் அரிசி மற்றும் தேங்காய்க்கு தட்டுப்பாடு

அத்தியவசிய பொருட்களின் விலையேற்றம் நாளுக்கு நாள் உயர்வடைந்து வருகின்றது. இந்த பிரச்னைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக அரசியல் கைதுகளை தற்போது முன்னெடுக்கின்றனர்.

எனக்கு எதிராகவும் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. நல்லாட்சி அரசாங்கத்திலும் எமக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இருப்பினும் எந்த குற்றச்சாட்டுக்களும் சட்டத்தின் முன் நிரூபிக்கப்படவில்லை.

நீதிமன்றத்தின் மீது எமக்கு நம்பிக்கை உள்ளது. அரசியல் பழிவாங்கல் செயற்பாடுகளை நீதிமன்றத்தின் ஊடாக தோற்கடிப் போம். குறுகிய அரசியல் நோக்கத்துக்காக விசாரணை கட்டமைப்பை பல வீனப்படுத்துவதையும்,

அச்சுறுத்துவதையும் அரசாங்கம் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

இந்த அரசாங்கத்தின் பல வீனத்தை கிராமத்துக்கு கிராமம் என்ற செயற் திட்டத்தி ஊடாக மக்களுக்கு நாம் எடுத்துரைப்போம்.

கடந்த கால தவறுகளை திருத்திக் கொண்டுள்ளோம். ஆகவே பல்வேறு காரணிகளால் எம்மை விட்டுப் பிரிந்து சென்றவர்கள் மீண்டும் எம்முடன் இணையலாம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அதற்கான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எமது பலத்தை மீண்டும் உறுதிப்படுத்துவோம் - என்றார். (அ)

ஐக்கிய மக்கள் கூட்டணியாக

## தொலைபேசிச் சின்னத்தில் களமிறங்கும் எதிர்க்கட்சிகள்



கொழும்பு, பெப். 04

ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பல ஒன்றிணைந்து எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் தொலைபேசிச் சின்னத்தின் கீழ் போட்டியிடுவது தொடர்பில் தற் போது தீர்மானம் மேற்கொண்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் கடந்த தினங்களில் கலந்துரையாடியதாகவும் அங்கு குறித்த கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையின் கீழ் ஐக்கிய மக்கள் கூட்டணியில் இணைந்து தேர்தல் பிரசாரத்தை முன்னெடுப்பது தொடர்பில் இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கடந்த சில தினங்களுக்குள் ஐக்கிய மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தலைமையிலான குழு ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடல் நடத்தி வந்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியுடனான கலந்துரையாடல்களின் போது, இரு கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பான அடிப்படை உடன்பாட்டை எட்டியதாக ஐக்கிய மக்கள் சக்திகளின் பொதுச் செயலாளர் அண்மையில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## உலக வங்கியின் மிகப்பெரிய கடன் இவ்வருடம் இலங்கைக்கு கிடைக்கும்

கொழும்பு, பெப். 04

வரலாற்றில் இதுவரை இந்த நாட்டுக்கு வழங்கப்பட்ட மிகப் பெரிய கடன் இந்த ஆண்டு உலக வங்கியால் வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உலக வங்கியுடன் தற்போது பேச்சுக்கள் நடைபெற்று வருவதாகவும், அவர்கள் ஏற்கனவே கடனை வழங்க ஒப்புக் கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

குருநாகலில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் நட்புறவுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார். (அ)

## கொள்கலன் நெருக்கடி குறித்து ஆராய சிறப்புக் குழு நியமனம்

கொழும்பு, பெப். 04

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களை அகற்றுவதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் போக்குவரத்தை நிறுத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து ஆராய நிதி அமைச்சு குழுவொன்றை நியமித்துள்ளது.

துறைமுகத்தில் தேங்கியுள்ள கொள்கலன்கள் அகற்றப்படாமை திட்டமிட்ட செயலா என்பதை ஆராய இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட 323 கொள்கலன்களை சுங்க சோதனைக்கு உட்படுத்தாமல் அனுமதித்தமை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைக்குரிய சூழ்நிலையை ஆராயவும் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

திறைசேரி துணைச் செயலர் ஏ. கே. செனவிரத்ன தலைமையில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் மேலதிக செயலாளர் இ.எம்.எஸ்.பி. ஜயசுந்தர, வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.கே.பி. குமார, முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.பி குரும்பலாபிட்டிய மற்றும் சிரேஷ்ட சுங்க பணிப்பாளர் சபுமல் ஜயசுந்தர ஆகியோர் குழுவில் உள்ளடங்குகின்றனர். (அ)

## மீண்டுமொரு கடன் சீரமைப்பை 2 வருடங்களில் செய்ய நேரிடும்!

### சஜித் பிரேமதாஸ கூறுகிறார்

கொழும்பு, பெப். 04

தற்போதைய நிலை தொடரும் பட்சத்தில் இன்னும் இரண்டு வருடங்களில் மீண்டுமொரு கடன் மறுசீரமைப்பொன்றை செய்ய வேண்டி ஏற்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

குருநாகல், இப்பாகமுவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐ.எம்.எப் உடன்படிக்கை மூலம் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய அரசாங்கம் எதிர்க்கட்சியில் இருந்தபோது, சர்வதேச நாணய நிதியத்தோடு புதியதொரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தி அதன் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்குவோம் என்று ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலின் போது கூறியது.

இப்போது முந்தைய அரசாங்கம் இணக்கப்பாடு கண்ட அதே ஒப்பந்தத்தை அதே வழியில் முன்னெடுத்து வருகின்றது.

இவற்றுக்கு மத்தியில் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான பின்னணி உருவாக்கப்பட்டுள்ளதா என அரசாங்கத்திடம் வினவ விரும்புகின்றேன். மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

நாடு எதிர்கொள்ளும் உண்மையான யதார்த்தம் என்னவென்றால், நாட்டுக்கு வழங்கியுள்ள பல முக்கிய இலக்குகளை நாம் முடிக்க வேண்டும். அவற்றில், விரைவான பொருளாதார வளர்ச்சி மற்றும் உயர் அரசாங்க வருவாயைப் பேணுதல் முக்கியமானதாகும்.

தவறும் பட்சத்தில், இன்னும் 2-3 வருடங்களில் மற்றொரு கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு செல்ல வேண்டி ஏற்படும்.

கடந்த காலங்களிலும் இது போன்ற எதிர்வுகூறல்களைச் சொன்னபோது நான் பரிகசிக்கப்பட்டேன், ஆனால் பின்னர் அவை அனைத்தும் நிகழ்ந்தன - என்றார். (அ)

## இந்திய - இலங்கை மீனவர் பிரச்னைக்கு கூட்டுக் குழு அமைத்துத் தீர்வை எட்டுக!

### வே.நாராயணசாமி வலியுறுத்தல்

சென்னை, பெப். 04

மீனவர் பிரச்சினைக்கு இந்திய - இலங்கை கூட்டுக் குழுவொன்றை அமைத்து தீர்வுகாண வேண்டும் என இந்தியாவின் புதுச்சேரி மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் வே. நாராயணசாமி வலியுறுத்தியுள்ளார்.

தமிழக, மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்தும் கைது செய்யப்படுவதுடன், தாக்குதலுக்கும் இலக்காகின்றனர்.

அவர்களின் படகுகளும் பறிமுதல் செய்யப்படுகின்றன.

அண்மையில் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த மீனவர்களுக்கு இலங்கையில் முறையான சிகிச்சை அளிக்கப்படவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இந்த விடயம் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளதுடன், இலங்கையில் உள்ள இந்திய இராஜதந்திரியுடனும் தாம் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னரே மத்திய அரசாங்கம் குறித்த துப்பாக்கிச் சூட்டுக்கு கண்டனம் தெரிவித்த தாகவும் இந்தியாவின் புதுச்சேரி மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் வே.நாராயணசாமி தெரிவித்துள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org